கமெண்ட் கந்தர்..



எதிர்க்கட்சிக்குள்ள ஒரு எதிர்க்கட்சியா...?


Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 435 பிலவ வருடம், தை மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை
(22.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 18, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


### உஷ்



சிறையிலுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறு கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தொலைபேசியூடாக கோரிக்கை விடுத்துள்ளாராம்.

அந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதாக உறுதியளித்தாராம் கோட்டா. இந்த விடுதலை தொடர்பில் நல்ல முடிவை ஜனாதிபதி எடுப்பாரென தகவல்.

# சஜித் - சம்பிக்க சண்டை; தனிவழி செல்லும் பாட்டலி



## ரணவக்கவின் நாளைய மாநாட்டிற்கு செல்லக்கூடாதென ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு கட்சி மேலிடம் கட்டளை




(யோ.தர்மராஜ்)

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளியாக இருக்கும் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கும் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் இதுவரை நிலவிவந்த கருத்து முரண்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் நேற்று 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தன.

02 பக்கம்

## 8 நாட்களுக்கான எரிபொருள் களனிதிஸ்ஸ மின்நிலையத்திற்கு



அடுத்த எட்டு நாட்களுக்கு களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தை இயக்குவதற்கு தேவையான 10,000 மெட்ரிக் தொன் டீசல் கிடைத்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த மற்றும் கொழும்பு துறைமுக மின் நிலையத்திற்கு 500 மெற்றிக் தொன் எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபையின்...

02 பக்கம்

இன்று புலமைப்பரிசில் பரீட்சை;

## விசேட நிலையங்களும் அமைப்பு

இன்று நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில், கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த்திகளுக்கு விசேட நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம்...

02 பக்கம்

## 5.1 பில்லியன் ரூபா நிலுவையால் நீர் வழங்கல் சபை நெருக்கடியில்




நிலுவைத் தொகையாகவுள்ள 5.1 பில்லியன் ரூபா நுகர்வோரிடமிருந்து இன்னும் வசூலிக்கப்படாத நிலையில், இந்த நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளின் விளைவாக ஏற்படும் செலவுகளை ஈடுசெய்ய முடியாததால், நீர் விநியோக செயல்முறையை உறுதிசெய்வதில் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்வதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

02 பக்கம்

கடனைப் பெறத் தவறினால் தினசரி 4 மணி நேர

## மின்வெட்டு

உதய கம்மன்பில தெரிவிப்பு



2022 மார்ச் மாதத்திற்குள் இலங்கை அமெரிக்க டொலர் கடனைப் பெறத் தவறினால், நாளாந்தம்...

02 பக்கம்

## தென் கொரிய தேசிய சபையின் சபாநாயகர் நாடாளுமன்றம் வருகை



தென் கொரிய நாடாளுமன்ற தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியொக் (Park Byeong-seug) தலைமையிலான தூதுக்குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை

02 பக்கம்

## ஆணைக்குழு பரிந்துரைகளுக்கெதிராக ஷானி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தமக்கு எதிராக முன்வைத்த பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள், அவன்கார்ட் நிறுவனம், அந்த நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க யாப்பா சேனாதிபதி மற்றும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜானக...

02 பக்கம்

## ஜனாதிபதி கொள்கை விளக்கவுரை விவாதத்தில் எம்.பிக்களை காணோம்!

### கோரம் மணி ஒலிக்கப்பட்டது

(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தின்போது, சபை அமர்வை நடத்துவதற்கான போதியளவு உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் ஹேசா விதானகேவினால் கோரம் மணி ஒலிக்கப்பட்டது.

02 பக்கம்

## நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடியுங்கள்

### ஆளுந்தரப்பு எம்.பி. டயானா கமகே கோரிக்கை

(யோ.தர்மராஜ்)



கொரோனா தொற்று காரணமாக மக்களுக்கு சேவையாற்றுவதற்காக இல்லாதுபோன இரு வருடங்களையும் பெற்றுக்கொடுக்கும்...

02 பக்கம்

## மஹிந்தானந்த - ஹரின் பெர்னாண்டோ நேருக்கு நேர் தொலைக்காட்சி விவாதம்

நேற்று பரஸ்பர இணக்கம்



(யோ.தர்மராஜ்)


ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தனியார் தொலைக்காட்சியில் நேருக்கு நேர்...



02 பக்கம்

## கழிவுகளை எறிபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

கொழும்பு துறைமுக நகர் செல்வோருக்கான விசேட அறிவிப்பு



கொழும்பு துறைமுக நகருக்குச் சென்று கழிவுகளை கடலில் எறிபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகருக்கு வருபவர்கள் சுற்றியுள்ள...

02 பக்கம்

## மிருகக்காட்சிசாலை போராட்டத்தால் விலங்குகள் உயிரிழக்கும் அபாயம்

### தெஹிவளையில் பெரும் இழுபறி

இலங்கையின் தேசிய உயிரியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகத்திற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உயிரியல் திணைக்கள ஊழியர்களுக்கும் இடையிலான மோதல் காரணமாக தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளின்...



02 பக்கம்

## கடத்தி காணாமலாக்கப்பட்ட மகனைத் தேடிய தாய் மரணம்



வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா பூம்புகார் கல்மடு பகுதியைச் சேர்ந்த கருப்பையா ராமாயி (வயது 78) என்ற தாயே நேற்று உயிரிழந்துள்ளார்.

02 பக்கம்

## மிருகக்காட்சிசாலை...

உயிர்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மிருகக்காட்சிசாலையிலுள்ள விலங்குகளை பணயம் வைத்து இரு தரப்பினரும் தங்கள் கோரிக்கைகளை வெல்ல முயல்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மிருகக்காட்சிசாலையினால் நியமிக்கப்பட்ட விலங்கு மருத்துவர் சமீபத்தில் சில விலங்குகள் உயிரிழந்துள்ளமை குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என குற்றஞ்சாட்டியுள்ள ஊழியர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் மிருகக்காட்சி சாலையிலுள்ள உயிரினங்களுக்கு உணவு வழங்குவதை நிறுத்தப்போவதாக ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் சி.பி.ரட்னாயக்க, மிருகக்காட்சிசாலையில் உயிரினங்களுக்கு உணவு வழங்குவதற்காக சிறையிலுள்ள கைதிகளை பயன்படுத்த தயங்கமாட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மிருகங்களை கையாள்பவர்கள் மிருகங்கள் குறித்து அக்கறையில்லாமல் அவற்றிற்கு உணவு வழங்காமல் துன்புறுத்த நினைத்தால் சிறைக்கைதிகளை பணிகளுக்கு பயன்படுத்துவேன் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நான் முன்னர் கால்நடைகள் தொடர்பான அமைச்சராக பணியாற்றியுள்ளேன். விலங்குகள், பறவைகளுக்கு உணவு வழங்காததை பார்க்கும்போது வேதனையாக உள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர், கடந்த காலங்களில் ஏதாவது விலங்குகள் உயிரிழந்திருந்தால், அவற்றின் பிரேத பரிசோதனை அறிக்கையை அரசாங்கத்தின் இரசாயன பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பிக்குமாறு அவர்கள் கோரலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விலங்குகள் உள்ள பகுதிகளுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. விலங்குகள் உள்ள கூடுகளின் பூட்டுகள் மாற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர ஏனையவர்கள் கூடுகளுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் நான் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியை சேர்ந்தவர்கள் என்றபோதிலும் நான் எவருக்கும் பக்கச்சார்பாக செயற்படப்போவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தென் கொரிய...





சந்திப்பதற்காக நேற்று (21) முற்பகல் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தென் கொரிய நாடாளுமன்ற தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியொக்கை வரவேற்று சபையில் விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

தூதுக்குழுவினர் மத்தியில் உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நாடாளுமன்றத்திற்கும் பிரஜைகளுக்கும் இடையில் விரிவடைந்துவரும் இடைவெளியை நிவர்த்திசெய்வதற்கு பிரஜைகளின் பங்கேற்பையும் நாடாளுமன்ற முறைமையில் ஈடுபாட்டையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் திறந்த நாடாளுமன்ற கொள்கையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மேலும், புதிதாக தொடர்பாடல் திணைக்களத்தை நிறுவியும், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு மற்றும் அரசாங்கக் கணக்குகள் குழு என்பவற்றை ஊடகங்களுக்கு அனுமதித்தும் நாடாளுமன்ற செயற்பாட்டின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனூடாக பயனுள்ள வகையில் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

பன்மொழித் தேடலைச் செயல்படுத்தும் திட்டத்தையும், நாடாளுமன்றத்தின் மின் நூலகம் ஊடான ஆவணக் காப்பக அமைப்புக்கான தளத்தையும் ஏற்படுத்தி டிஜிட்டல் மயமாக்கலை ஆரம்பித்துள்ளதாகவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார். காகிதமற்ற நாடாளுமன்றம் என்ற திட்டத்தின் நோக்கத்தையும் சபாநாயகர் இதன்போது வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்ற இணையத்தளத்தை மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் அது நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

பிரஜைகளின் பங்கேற்பையும் ஈடுபாட்டையும் மேம்படுத்தும் இலங்கை நாடாளுமன்றத்தின் முயற்சியை பாராட்டிய தென் கொரிய நாடாளுமன்ற தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியொக், தாங்களும் அதனை அடைவதில் முனைப்பாக இருப்பதாக தெரிவித்தார். இதேவேளை, தென் கொரிய நாடாளுமன்ற தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியொக், இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை தென் கொரியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தென் கொரிய சபாநாயகரின் வருகையின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் மூன்று உறுதியான நன்மைகள் தொடர்பில் சுட்டிக்காட்டினார். தென் கொரியாவில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள், தொழில் பயிற்சி மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கொரிய நிறுவனங்களின் அதிக முதலீடு மற்றும் பங்களிப்பை இந்த விஜயம் ஊக்குவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன, ஆளும் கட்சி முதற்கோலாசானும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கை - தென் கொரிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இலங்கை - தென் கொரிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் பிரமித்த பண்டார தென்னக்கோன், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## கடத்தி காணாமலாக்கப்பட்ட...

இவரது வளர்ப்பு மகனான ரா.இந்திரபாலன் (வயது 38) கடந்த 2007ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டிருந்தார்.

அவரைத் தேடி வவுனியாவில் கடந்த 1799 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் குறித்த தாய் கலந்துகொண்டு தனது மகனை கண்டுபிடித்துதரக் கோரி போராடி யிருந்தார்.

இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் நேற்று உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றத்தின்...

வகையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டு, ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தையும் இரு வருடங்களுக்கு நீடிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாக ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஆரம்பித்துவைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று (21) உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகள் உலக முழுவதிலும் ஏற்பட்ட தொற்று தாக்கத்தினால் ஏற்பட்டது. இது இலங்கைக்கு மாத்திரம் பாதிப்பானதல்ல. முழு உலகத்திற்கும் இது பாதிப்பாகவே அமைந்தது.

இந்நிலையில், கடந்த காலங்களில் மீரிகம – குருநாகல் வரையான அதிவேக பாதை திறந்துவைக்கப்பட்டது. இவை திறக்கப்படக் கூடாதா? இவை மக்களின் பணத்தினால் உருவாக்கப்பட்டது. வேறு யாரும் தங்களுடைய வீடுகளிலிருந்து கொண்டுவந்து உருவாக்கியதல்ல.

எந்த அரசாங்கம் வந்தாலும் இவற்றை செய்தாக வேண்டும். முடிந்தவரை ஜனாதிபதியினால் திறக்கப்பட்டது குறித்து பேசப்பட வேண்டும். தகவல்களைக்கொண்டு நாங்கள் பேசுவதால் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது.

மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு இரண்டு வருடங்கள் இல்லாதுபோனது. எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக்கொண்டு, அந்த இரு வருடத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் அவருடைய பதவிக்காலத்தையும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் இரு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைக்கின்றேன்.

இல்லாதுபோன, இரு வருடங்கள் இருந்திருந்தால் மீதமுள்ள அதிவேக பாதையையும் திறந்திருக்க முடியும். ராஜபகஷ காலத்திலேயே இந்த நாட்டில் அதிவேக பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. எனவே, மீதமுள்ள பாதைகளையும் நிறைவுசெய்தாக வேண்டும் - என்றார்.

## ஜனாதிபதி கொள்கைப்...

கடந்த 18 ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஆரம்பித்து வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதம் நேற்று (21) மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

எனினும், விவாதம் இடம்பெற்ற மூன்று நாட்களாகவும் சபை அமர்வுகளில் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் உட்பட போதியளவான எம்.பிக்கள் கலந்துகொண்டிருக்கவில்லை. இந்த நிலையில், நேற்றும் (21) இடம்பெற்ற மூன்றாம் நாள் விவாத்தின் போது ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

இது குறித்து, எதிர்க்கட்சியினர் இரு முறை சுட்டிக்காட்டிய போதிலும், ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சபைக்கு வருகை தந்திருக்கவில்லை. இதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னான்டோ, உறுப்பினர்களின் சமூகமளிப்பு குறித்து சபையில் கேள்வி எழுப்பியதுடன், ஜனாதிபதியின் உரை மீதான விவாதத்திற்கு ஆளுந்தரப்பு உறுப்பினர்களே இல்லை எனில் என்ன செய்வது என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனைத் தொடர்ந்து அவ்வேளை சபைக்கு தலைமை தாங்கிய, உறுப்பினர் ஹேசா விதானகேவினால், சபையிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்து ஆராய்ந்து பார்த்தார். இதன் போது, சபை அமர்வுகளை நடத்திச் செல்வதற்கு போதுமான உறுப்பினர்கள் இல்லை என்பதை அறிந்து, கோரம் மணியை ஒலித்தார். இதனையடுத்து, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சபைக்குள் வருகை தந்தனர்.

## மஹிந்தானந்த...

விவாதத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஆரம்பித்துவைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதம் மூன்றாவது நாளாகவும் நேற்று (21) இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிக்கொண்டிருந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, ஈஸ்டர் தினத் தாக்குதல் தொடர்பாக பல தகவல்களை முன்வைத்தார். இதன்போது, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இடையிடையே குறுக்கீடு செய்ததால் கடுந்தொனியில் அவர் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இதனையடுத்து, உரையின் நடுவே குறுக்கிட்ட ஆளுந்தரப்பு உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே, ஈஸ்டர் தினத் தாக்குதல் தொடர்பான தகவல்களைக் கொண்டு திறந்த விவாதத்திற்கு வருமாறு ஹரின் பெர்னாண்டோவிற்கு அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட, உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, எந்த தொலைக்காட்சியில் என்பதையும் நீங்கள் கூறுங்கள். நான் விவாதத்திற்கு வருகின்றேன். என்னுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்காரவும் வருவார். உங்களுக்கு விரும்பமானவர்களை நீங்கள் அழைத்துக்கொள்ளுங்கள் - என்றார்.

இதனையடுத்து, இருவேறு தொலைக்காட்சி களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேருக்கு நேர், விவாதிப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்தனர்.

இதனால், ஈஸ்டர் தினத் தாக்குதல் தொடர்பாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் நேருக்கு நேர் பகிரங்க விவாதத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கழிவுகளை...

நீரில் குப்பைகளை இடுவது தொடர்பான பதிவுகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளதாக கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

கடல் மாசு தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் அத்தகைய குழுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கடலில் கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்கும் வகையில், கொழும்பு துறைமுக நகருடன் இணைந்து விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் பொதுவாக இலங்கை கடற்கரைகளுக்குச் செல்லும்போது கடல் சூழலில் கழிவுகளை வெளியேற்றுவதைத் தவிர்க்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூர் கடல் சூழல் மிகவும் மாசுபட்டுள்ள தாகவும் அவர் எச்சரித்தார்.

## இன்று புலமைப்பரிசில்...

வழங்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளரான அமித் ஜயசுந்தர கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் விடுவதும், பாடசாலை மாணவர்களை தேர்வு மையத்திற்கு அழைத்துச் செல்வதும் பொதுவான செயல்முறையாகும் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், மாணவர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், அவர்களின் பெற்றோர் அவர்களை விசேட தேர்வு மையங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குச் சென்று பெற்றோர் விசேட நிலையங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாணவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருப்பின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்கள் அன்ரிஜன் சோதனை அல்லது பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், மாணவர்கள் கொரோனா தொற்றாளர்களாக சந்தேகிக்கப்பட்டாலும், நேர்மறை சோதனை செய்யவில்லை என்றால், விசேட மையங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டார்.

தனிமைப்படுத்தல் அல்லது கொரோனா அறிகுறிகளைக்கொண்ட விண்ணப்பதாரர்களுக்குத் தனியான விசேட வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆணைக்குழு...

பண்டார உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு 2020 ஜூன் 16ஆம் திகதி தனக்கு அழைப்பு கிடைத்ததாக மனுதாரர் ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய தான் அழைக்கப்பட்டதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் செய்த முறைப்பாட்டினை விசாரிக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என சுட்டிக்காட்டிய அவர், கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் மற்றும் நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் இந்த முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார். எனவே, இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு குறித்த ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தமக்கு எதிராக 2020 நவம்பர் 24ஆம் திகதி சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சட்டவிரோத மானவை எனவும் சட்ட அடிப்படையற்றவை எனவும் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், அவற்றை வலுவிழக்கச்செய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

## 8 நாட்களுக்கான...

மேலதிக பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான அன்ட்ரூ நவமணி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாட்டிற்கு தேவையான எரிபொருள் இன்னும் ஒன்பது மணித்தியாலங்களுக்கு மட்டுமே போதுமானது எனவும் கொழும்பு துறைமுக மின் நிலையத்தின் செயற்பாட்டிற்கு தேவையான எரிபொருள் அடுத்த 20 மணித்தியாலங்களுக்கு போதுமானது எனவும் அன்ட்ரூ நவமணி கருத்து தெரிவித்துள்ளார். மின்சாரம் துண்டிக்கப்படாமல் சில நாட்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபைக்கு சாத்தியம் உள்ளதாகவும் நவமணி குறிப்பிட்டார்.

## 5.1 பில்லியன்...

மொத்த நிலுவைத் தொகையில், உள்நாட்டு நுகர்வோர் சுமார் 3700 மில்லியன் ரூபா மருத்துவமனைகள், அரச அலுவலகங்கள், இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் 265 மில்லியன் ரூபாவை செலுத்தவேண்டும் என சபையின் உதவிப் பொது முகாமையாளரான ஏகநாயக்க வீரசிங்க தெரிவித்தார்.

மேலும், 700 மில்லியன் ரூபாவை வர்த்தக மற்றும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்கள் செலுத்த வேண்டும்.

அத்துடன், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பிறவற்றிலிருந்து 60 மில்லியன் ரூபா வசூலிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றால் வழங்கப்பட்ட கால அவகாசமே நீர் கட்டணக் கொடுப்பனவுகளில் இத்தகைய பற்றாக்குறை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு தீர்வு காண உரிய கொடுப்பனவுகளை விரைவில் செலுத்துமாறு மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிலுவைத் தொகையை செலுத்தத் தவறினால், எதிர்காலத்தில் நீர் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடனைப் பெற ...

சுமார் 04 மணித்தியாலங்கள் நீடிக்கும் மின்வெட்டு ஏற்பட வாய்ப்புள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தேவையான தியாகங்களை செய்வதற்கு நாடு தயாராக இருக்கவேண்டும் எனவும், அரசியல்வாதிகள் முன்னுதாரணமாக தியாகங்களைச் செய்து வழிவகுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

குறைந்தபட்சம் ஏப்ரல் மாதம் பருவமழை தொடங்கும் வரையில் தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு கையிருப்பில் எரிபொருளை இறக்குமதி செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மழைக்காலம் வரை நாட்டில் எரிபொருளை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்திசெய்ய வேண்டும்.

24 மணிநேரமும் தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான இந்த முயற்சியின் அடிப்படையில், பாரிய கடனைப் பெறாவிட்டால் மார்ச் மாதத்திற்குள் சுமார் 04 மணிநேர நாளாந்த மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிவரும்.

நான்கு மணிநேர மின்வெட்டுக்கு செல்வதை விட, இப்போதிருந்தே ஒன்றரை மணிநேர மின்வெட்டை அமுல்படுத்துவது நல்லது அல்லவா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## சஜித் - சம்பிக்க...

இருவருக்கும் இடையிலான இந்த முரண்பாட்டின் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் நாளை (23) இடம்பெறவுள்ள சம்பிக்கவின் புதிய அரசியல் அணியான 43ஆம் படையணியின் தேசிய மாநாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு உறுப்பினரும் செல்லவேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளதாகவும் அறியமுடிந்தது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கு இந்தக் கூட்டத்திற்கு அழைப்புவிடுத்துள்ளதால் அவர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிகிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளியாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இருக்கின்றார். எனினும், கடந்த சில மாதங்களாக இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதோடு, இருவரின் நிலைப்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வடக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டார். அந்தப் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இணைய சஜித் தடை விதித்திருந்தார். ஆனால், அங்கு சம்பிக்கவுக்கு கிடைத்த அமோக வரவேற்புக்குப் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.


இதனால், சஜித் மற்றும் சம்பிக்கவிற்கு இடையிலான கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளதுடன், சம்பிக்க ரணவக்க தனிவழியில் பயணித்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கான முயற்சிகளையும் முன்னெடுப்பதாக பல தகவல் வெளிவந்த நிலையிலேயே தற்போது அவர் தலைமையில் இடம்பெறும் மாபெரும் தேசிய மாநாட்டை புறக்கணிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு சஜித் பிரேமதாச கடும் கட்டளையை பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கவின் தலைமையில் நாளை 23ஆம் திகதி நண்பகல் 2 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரவில் ‘நம்பிக்கையோடு காத்திருப்போம். உயர்வோம், உயர்த்துவோம்” என்ற தொனிப்பொருளில் மாபெரும் தேசிய மாநாடொன்று இடம்பெறவுள்ளது. இதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதன் பங்காளிக்கட்சித் தலைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சஜித் - சம்பிக்கவின் முரண்பாடுகள் மேலும் தீவிரமடையுமாக இருந்தால் சம்பிக்க எம்.பி, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து தனிவழியில் பயணிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. எனினும், அவர் கட்சியைவிட்டு வெளியேறினால் அது சஜித் பிரேமதாசவிற்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் சொல்லப்படுகிறது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நாளை 23ஆம் திகதி இடம்பெறவுள்ள தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளாதபட்சத்தில் சம்பிக்க ரணவக்க அதிரடி முடிவை எடுக்கலாம் என்றும், அவர் தனது தலைமையில் பாரிய அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கும் வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரிய சபாநாயகருடன் அமைச்சர் பீரிஸ் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராய்வு





கொரிய குடியரசின் தேசிய சபையின் சபாநாயகர் பார்க்பியோங்-சியூக் தலைமையில் விஜயம் செய்திருந்த கொரிய தூதுக்குழுவை கௌரவிக்கும் வகையில், கடந்த 20ஆம் திகதி வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மதிய போசன விருந்தளித்தார்.

மதிய போசனத்தின்போது, கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

கட்டுமானம், மின் உற்பத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் ஆகியவற்றில் கொரியாவின் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களுடன் இதுவரை நல்கப்பட்ட மகத்தான ஆதரவிற்காக கொரிய அரசாங்கத்திற்கான இலங்கை அரசாங்கத்தின் ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முதலீடுகள், அதிகரித்த தொழில் வாய்ப்புகள் மற்றும் கொரிய அதிகாரிகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கு அழைப்பு விடுத்தார். கடந்த காலங்களில், கொரிய தொழில் முயற்சியாளர்களுக்காக இலங்கையில் விசேட முதலீட்டு வலயம் அமைக்கப்பட்டிருந்தமையை நினைவுகூர்ந்த அமைச்சர் பீரிஸ், இந்த முயற்சியை மீளப்பெறுவது குறித்து பரிசீலனை செய்வது சரியான தீர்வாக இருக்கும் என வலியுறுத்தினார்.

கொரிய சபாநாயகர் தனது உரையில், இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே நிலவி வருகின்ற மிதமிஞ்சிய இருதரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்துவதற்கான கொரிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். மிகவும் ஏழ்மையான நாடாக இருந்த கொரியா, ஒரு நூற்றாண்டு கால இடைவெளியில் அப்பகுதியில் மாபெரும் பொருளாதார நாடாக மாறியதன் தந்திரோபாயத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய அவர், இலங்கையின் பொருளாதாரத்தை இந்து சமுத்திரத்தில் ஒரு முக்கிய கடல்சார் மையமாக விரிவுபடுத்தி, மேம்படுத்துவதற்காக கொரியாவின் அபிவிருத்தி மாதிரியை இலங்கையும் பின்பற்றலாம் என சுட்டிக்காட்டினார்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் தவிர, கொரோனா வைரஸ் தொற்றுநோய் மற்றும் நல்லிணக்கத்தில் இலங்கையின் முன்னேற்றம், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் மற்றும் அதன் சீர்திருத்த செயன்முறைகளை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# 12ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நேற்று யாழில் ஆரம்பம்

















(யாழ் நிருபர்)

12ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தை நாளை 23ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். (LECS) நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# மேல் மாகாண சுகாதார உத்தியோகத்தர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானம்

சுகாதார சேவையாளர் சம்மேளனத்திற்குட்பட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 26ஆம் திகதி மேல் மாகாண வைத்தியசாலைகளில் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

ஆசிரியர் சேவைக்கு இணையாக சுகாதார சேவையாளர்களின் வேதன கொடுப்பனவு முரண்பாட்டிற்கான தீர்வினை வழங்க வேண்டும் எனக் கோரி இந்த பணிப்புறக்கணிப்பினை முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் 26ஆம் திகதி தாதியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் இணைந்து இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

# நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 45 பேருக்கு கொரோனா

பெந்தோட்டையில் நட்சத்திர தரப்படுத்தப்பட்ட ஹோட்டல் ஒன்றின் 42 ஊழியர்கள் மற்றும் மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 45 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பெந்தோட்டை இந்துருவ சுகாதார வைத்திய அதிகாரி நேற்று தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அனைத்து ஹோட்டல் ஊழியர்களும் மருத்துவ ஆலோசனையின் பேரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள ஊழியர்கள் பி.சி.ஆர் சோதனைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

# சம்பிக்க ரணவக்க விபத்து வழக்கின் சாட்சி விசாரணைகள் பெப்ரவரியில்


2016ஆம் ஆண்டு ராஜகிரிய வீதி விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சிய விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டாவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுகயீனம் காரணமாக முன்னைய விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது வெலிக்கடை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த சுதத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியான திலும் துசித குமார ஆகியோர் இந்த வழக்கின் ஏனைய குற்றவாளிகளாக உள்ளனர்.

# கூலிவேலைக்காக சென்ற பேரனைக் காணவில்லை; பேரனைக் கண்டுபிடித்து தருமாறு அவரது பாட்டி கதறல்





(வாழைச்சேனை நிருபர்)

தனது பேரனை கண்டுபிடித்துத் தருமாறு பாட்டி ஒருவர் உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சூர நகர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமகம் தர்மவதி (வயது 72) என்ற பாட்டியே இவ்வாறு உணவின்றி, உறக்கமின்றி அழுது புலம்புகிறார்.

மாணிக்கராசா மதுசாந் (வயது 21) என்ற இளைஞன் வறுமை நிலைமை காரணமாக கொழும்பு வெள்ளவத்தைக்கு தனது உறவினர்களுடன் கூலி வேலைக்காக 09.01.2022ஆம் திகதியன்று சென்றுள்ளார். மனநலம் பாதிக்கப்பட்டவரான இவர், சிகிச்சைபெற்று வந்ததினால் ஓரளவு நோய் குறைவடைந்து காணப்பட்டுள்ளது.

பொங்கல் தினத்திற்கு மறுநாளான 15.01.2022ஆம் திகதியன்று வெளியில் சென்றவேளை காணாமல்போயிருந்தார். இவரை காணவில்லையென தேடியபோது கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து 16.1.2022ஆம் திகதி இரவு மீட்டுள்ளனர். பின்னர் அவரை இருப்பிடத்திற்கு அழைத்துச்செல்ல முச்சக்கரவண்டியில் ஏற்றுவதற்கு முயற்சித்தபோது அவர்களை தள்ளிட்டு ஓடி மறைந்துள்ளதாக அவரை கொழும்பிற்கு அழைத்துச் சென்றவர்கள் தகவல் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக அவரை கண்டுபிடித்து தருமாறு வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் மற்றும் திருகோணமலை அலி ஒலுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். இவரது 2 வயதில் தாயார் நோய் காரணமாக உயிரிழந்துள்ளர். இதன்போது பேரப்பிள்ளையான மதுசாந்தை அவரது பாட்டியே பராமரித்து வந்துள்ளார்.

இவரைக் கண்டவர்கள் 0766794093, 0766794093 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளுமாறு உறவினர்கள் கேட்கின்றனர்.

# 70 மில்லியன் ரூபா பெறுமதியுடைய ஹெரோயின் பாணந்துறையில் மீட்பு

பெருந்தொகை ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 7 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி சுமார் 70 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கையின் ஊட்டச்சத்து நிலைமை தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வு

## சுகாதார அமைச்சு தகவல்

இலங்கையிலுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் போஷாக்கு நிலை தொடர்பில் நாடளாவிய ரீதியிலான கணக்கெடுப்பை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், உலக சிறுவர்கள் நிதியம் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இந்தக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தகவல்களுக்கமைய, இது தொடர்பான தரவு சேகரிப்பு செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியிலுள்ள 2000 குடும்ப அலகுகள் கணக்கெடுப்புக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இலங்கையில் இவ்வாறான போஷாக்கு நிலை ஆய்வானது கடந்த 2016ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மக்களின் போஷாக்கு நிலையானது, கொவிட்-19 தொற்று நோயின் தொடக்கத்தில், நாடு பலமுறை முடக்கப்பட்டதால் கடுமையான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

நகர்ப்புற மற்றும் தோட்டப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஊட்டச்சத்து நிலை விரைவான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

# எனது கணவரைக் கொன்றோரை வெறுக்கும் வகையில் பிள்ளைகளை வளர்க்கமாட்டேன்!

## பிரியந்த குமாரவின் மனைவி தெரிவிப்பு





பாகிஸ்தானின் சியால்கோட்டில் கொலைச் செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் மனைவியான நிலுஷி திசாநாயக்க, குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தி நீதியை உறுதிசெய்யுமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பிரியந்த குமாரவின் நினைவாக இடம்பெற்ற அனுதாப நிகழ்வின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனது கணவருக்கு நீதி கிடைக்கும் வகையில், குற்றவாளிகளை விரைவில் தண்டிக்குமாறு பிரதமர் இம்ரான் கானிடம் கேட்டுக் கொள்கிறேன். இது பழிவாங்குவதற்காக அல்ல. இதுபோன்ற செயல் எதிர்காலத்தில் யாருக்கும் இடம்பெறக்கூடாது என்பதற்காக என பிரியந்த குமாரவின் மனைவி இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைத்து பாகிஸ்தானியர்களுக்கும், இந்த நிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக உயர் ஸ்தானிகராலயத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

மேலும், எனக்கு ஆதரவளித்த இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் எனது பிள்ளைகளை அவர்களின் தந்தையைக் கொன்றவர்களை வெறுக்கும் வகையில் வளர்க்கமாட்டேன். பௌத்த போதனைகளின்படி அவர்களிடம் கருணை காட்டும் வகையில் வளர்ப்பேன் என பிரியந்த குமாரவின் மனைவி மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச, தனியார் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு திருமலையில் சுவரொட்டி

(ரவ்பீக் பாயிஸ்)




அரச, அரை அரச, தனியார் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கக் கோரி திருகோணமலை நகர் எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் அரச, அரை அரச தனியார்துறை சம்பளத்தை ரூபா 15,000ஆல் அதிகரி, தனியார்துறையின் ஆகக்குறைந்த சம்பளத்தை ரூபா 26,000ஆக ஆக்கு மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 1500ஆக ஆக்கு என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் திருகோணமலை நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் தொழிலாளர் போராட்டம் மத்திய நிலையம் எனும் பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச தனியார்துறை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி சுவரொட்டிகள் பிரசுரிக்கப்பட்டபோதிலும் கிழக்கு மாகாணத்தின் ஆசிரியர்களுக்கான 5000 ரூபா கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 22ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# உலகம் கவனிக்க வேண்டியது...

இலங்கையுடனான இரு தரப்பு உறவுகள் குறித்த பிரிட்டனின் அணுகுமுறையை மறுபரிசீலனை செய்யவேண்டும் என 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கம்' வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய அமைச்சர் தாரிக் அகமட்டிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் பரிந்துரைத்தபடி உள்நாட்டு சட்டங்கள் மற்றும் சர்வதேச நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தி தடைகளை விதிக்கவேண்டும் எனவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கெதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ள பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கம், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர் என்ற அடிப்படையில் இலங்கையின் அனைத்து மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்து, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார செழிப்பை உறுதிசெய்வதற்காக பொருளாதார சீர்திருத்தத்தை மாத்திரமல்லாமல், கட்டமைப்பு மாற்றங்களையும் இலங்கை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுக்கவேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கம் பிரித்தானிய அமைச்சருக்கான தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தமிழர்கள், சுயநிர்ணய உரிமைக்கான தங்களின் அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் அரசியல் தீர்வொன்றை சர்வதேச சகாக்களுடன் இணைந்து காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ள பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கம், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை மீண்டும் இடம்பெறாது என்பதை உறுதிசெய்வதற்காக சர்வதேச அளவில் கண்காணிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழர்களின் விருப்பங்களைப் பெற்று அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேபோல் பிரித்தானிய அமைச்சர் தாரிக் அகமட்டை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்திருக்கிறார்.

குறைந்தபட்ச அரசியல் தீர்வைக்கோரி ஒருபுறம் இந்தியாவுக்கு கடிதம் அனுப்பும் தமிழ்த்தரப்பு மறுபுறம் மேற்குலகத்திடமும் தனது கோரிக்கைகளை முன்வைத்து வருகிறது. இந்த இடைவெளிக்குள், புலம்பெயர் இலங்கையர்களுடன் பேச்சுநடத்தத் தயாரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரித்தானிய அமைச்சரிடம் கருத்தை வெளியிட்டுள்ளார். புலம்பெயர் இலங்கையர்கள் என்றால் தமிழர்களா அல்லது சிங்களவர்களா என்ற விபரம் ஜனாதிபதி தரப்பினால் சரியாக சொல்லப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகள் தமது முன்னைய தீர்மானங்களை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிலைமை உள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இலங்கையில் தமிழர்களுக்கு, தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சினை என்ற ஒன்று உள்ளது. அது எந்த வகையில் தீர்க்கப்படவேண்டும் என்பது குறித்து ஆலோசிக்க வேண்டிய கட்டாயத்தில் மேற்குலகம் இருக்கிறது என்பதே யதார்த்தமான உண்மை.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி இயக்கமும், தமிழர் பிரதிநிதிகளும் பிரித்தானியாவிடம் சொல்லியிருக்கும் விடயங்கள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்தப்படவேண்டும்.

# புகைத்தலின் பாதிப்பை குறைக்கும் விற்றமின் சி



வாசினி யுகேந்திரன்
- போசணையாளர்
யாழ்.போதனா வைத்தியசாலை



*கடந்தவாரத் தொடர்ச்சி...*

### விற்றமின் பி12

விற்றமின் 'பி'யில் மிகவும் முக்கியமானது விற்றமின் 'பி'12 ஆகும். இந்த விற்றமின் 'பி'12 ஆனது விலங்குணவுகளிலேயே அதிகளவில் காணப்படுகின்றது. இறைச்சி, ஈரல், மீன், முட்டை, பால், பால் உற்பத்திப் பொருட்கள், ஓடுடைய மீன்கள் (இறால், நண்டு, மட்டி) போன்ற உணவுப்பொருட்களில் காணப்படுகின்றது. இந்த விற்றமின் 'பி'12 ஆனது பரம்பரை அலகுகளை கட்டமைப்பதற்கும், குருதியிலுள்ள சிவப்பணுக்களின் உற்பத்தி மற்றும் நரம்புத் தொகுதியின் பராமரிப்பு போன்றவற்றுக்கும் அவசியமானது. பொதுவாக வளர்ந்தவர்களுக்கு நாளொன்றுக்குத் தேவையான இந்த விற்றமின் அளவானது 2.4mcg ஆகும். இந்த விற்றமின் குறைபாடானது, பொதுவாக தாவர உணவுகளை மட்டும் உட்கொள்பவர்களுக்கு ஏற்படும். இந்த விற்றமின் குறைபாட்டினால் அனீமியா, சோர்வு, நரம்பு சம்பந்தமான நோய்களும், உணர்வின்மை மற்றும் உச்சம் போன்ற நரம்பு சம்பந்தமான கோளாறுகளும் ஏற்படுகின்றன. இந்நோய்க் குறைபாடுள்ளவர்கள் கட்டாயமாக விற்றமின் 'பி'12 supplement உட்கொள்ள வேண்டும். அத்துடன் தாவர உணவுகளை மட்டும் உட்கொள்பவர்கள் மேலதிகமாக விற்றமின் 'பி'12 சேர்க்கப்பட்ட (fortitication) உணவுகளை உட்கொள்ள வேண்டும். அத்துடன் விற்றமின் 'பி'12 supplement இனை வைத்தியர் அல்லது போசணையாளரின் ஆலோசனையின்படியே உட்கொள்ள வேண்டும். இந்த விற்றமின், பெருங் குடலில் அகத்துறிஞ்சப்படுகின்றது. எனவே, பெருங்குடல் சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் மேலதிகமாக விற்றமின் 'பி'12 supplement எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

### பயோட்டின் (biotin)

அடுத்த விற்றமின் 'பி' ஆனது பயோட்டின் ஆகும். இந்த விற்றமின், நீரில் கரையக்கூடிய தன்மை கொண்டது. மாப்பொருள், கொழுப்பு மற்றும் புரதத்திலிருந்து சக்தியை பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றது. இந்த விற்றமின், அதிகளவில் ஈரல், முட்டை, மஞ்சட்கரு, பால், மரக்கறிகள் மற்றும் தானியங்கள் போன்றவற்றில் காணப்படுகின்றது. அத்துடன், சிறுகுடலில் காணப்படும் நன்மை விளைவிக்கும் பக்டீரியாக்களை உற்பத்தி செய்கின்றது. பொதுவாக இந்த விற்றமினால் குறைபாடுகள் ஏற்படுவதில்லை.

### பெண்டோதெனிக் அமிலம் (pantothenic acid)

விற்றமின் 'பி' ஆனது பெண்டோதெனிக் அமிலம் ஆகும். இது 'பி'5 என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த விற்றமின், சக்தி உற்பத்தி, சிலவகையான ஹோர்மோன்களின் உருவாக்கம், உணவிலிருந்து மாப்பொருள், கொழுப்பு மற்றும் புரதத்தினை பிரித்தெடுத்தல் போன்றவற்றுக்கு பயன்படுகின்றது. இந்த விற்றமின், ஈரல், இறைச்சி வகை, முட்டை, மஞ்சட்கரு, தவிடுள்ள தானியங்கள், அவரை இன தானியங்கள் போன்றவற்றில் காணப்படுவதுடன், சிறுகுடலிலுள்ள பக்டீரியாக்களினாலும் உற்பத்திசெய்யப்படுகின்றது. பொதுவாக எல்லாவகையான உணவுகளிலும் காணப்படுவதால் இந்த விற்றமின் குறைபாட்டினால் பெரும்பாலும் நோய்கள் ஏற்படுவதில்லை.

### விற்றமின் சி

விற்றமின் சி ஆனது, சூரிய ஒளியின் மூலம் அழியக்கூடியது. உயர் வெப்பநிலையில் அறியக்கூடியது. ஒட்சிசன் மூலம் மாற்றமடையக்கூடியது. மேலும், சிறுகுடலினால் அகத்துறுஞ்சப்படுகின்றது. மேலதிகமான விற்றமின் 'சி' சிறுநீர் மற்றும் வியர்வை மூலம் வெளியேற்றப்படுகின்றது. நாளொன்றுக்கு தேவையான விற்றமின் 'சி'யின் அளவானது 60-90 மி.கி. ஆகும். விற்றமின் 'சி' இனை ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும். ஏனெனில், விற்றமின் 'சி' சேமிக்கப்படுவதில்லை. இதன் முக்கிய தொழிற்பாடானது ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு தொகுதியைப் பராமரித்தல் ஆகும்.

விற்றமின் 'சி', பழங்களான அன்னாசி, தர்பூசணி, கொய்யா, நெல்லி, மாம்பழம் போன்ற பழங்களில் அதிகளவில் காணப்படுகின்றது.

இந்த விற்றமின் 'சி' குறைபாடு காணப்படுமாயின் விரைவாக தொற்று நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன. இந்த விற்றமின், Anti oxidant ஆகவும் செயற்படுகின்றது. இது, அழற்சி சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கின்றது. அதாவது அழற்சி சம்பந்தமான நீண்ட சங்கிலியால் தாக்கங்கள் தொடர்ந்து நடைபெறுவதை தடுக்கின்றது. இந்த Anti oxidant தொழிற்பாடு காரணமாக புகைபிடிப்பவர்கள் நாளொன்றுக்கு உட்கொள்ள வேண்டிய விற்றமின் 'சி' யின் அளவானது ஏனைய ஆரோக்கியமானவர்கள் உட்கொள்ள வேண்டிய அளவினை விட கூடுதலாக (110மி.கி.) எடுத்தல் வேண்டும். ஏனெனில், புகைப்பிடிப்பதால் ஏற்படும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் சில மூலக்கூறுகளுடன் விற்றமின் 'சி' தாக்கத்தினை ஏற்படுத்தி அம்மூலக்கூறுகளின் பாதிப்பைக் குறைக்கின்றது. இதன் காரணத்தினால் புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்பு ஓரளவு குறைகின்றது. அத்துடன் விற்றமின் 'சி' யில் காணப்படும் Anti oxidant தொழிற்பாடானது வயதானவர்கள் போன்ற தோற்ற தன்மையையும் குறைக்கின்றது.

மேலும், எலும்புகளில் காணப்படும் கொலாஜன் எனும் கூறு உருவாகுவதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே, வளர்ந்தவர்கள் எலும்பு சம்பந்தமான நோய்களை தவிர்ப்பதற்கு விற்றமின் 'சி' யின் அளவை சீராகப் பராமரித்தல் வேண்டும். இரும்பு எனும் கனியுப்பின் அளவை அதிகரிக்க இது உதவுகிறது. அதாவது, தாவரத்தில் காணப்படும் கனியுப்பின் அகத்துறிஞ்சலானது மிகவும் குறைவாகக் காணப்படும். எனவே, தாவர இரும்பு உணவுகள் உட்கொள்ளும்போது விற்றமின் 'சி' கூடிய உணவுகளை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இதன் காரணத்தினால் கர்ப்பிணித் தாய்மார்களின் இரும்புச் சத்தின் தேவையானது மிகவும் அதிகமாகும். எனவே, அவர்கள் விற்றமின் 'சி' கூடிய உணவுகளுடன் விற்றமின் 'சி' supplement உம் எடுத்தல் வேண்டும்.

அத்துடன் விற்றமின்' சி' யில் காணப்படும் ஒட்சிசன் ஏற்றம் எனும் தொழிற்பாட்டின் மூலம் கொழுப்புள்ள உணவுகளை உட்கொள்ளும்போது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கெட்ட கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் போன்றவை உருவாகின்றன. ஆனால், விற்றமின் 'சி', கெட்ட கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் உருவாக்கத்தின் அளவைக் குறைக்கின்றது. மேலும், விற்றமின் 'சி', மன அழுத்தத்தினை குறைப்பதற்கும் உதவுகின்றது. உடலில் ஏற்படும் காயங்கள், புண்கள் ஆறுவதற்கும் காலதாமதம் ஏற்படும். முறிந்த எலும்புகள் குணமடைவதற்கும் தாமதம் ஏற்படும். மூக்கு, தோல் மற்றும் வாய் ஈறுகளில் இரத்தக்கசிவு ஏற்படுவதற்கும் அதிகமான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அதேபோல் அளவுக்கு அதிகமாக விற்றமின் 'சி' இனை உணவின் மூலம் supplement ஆக எடுத்துக்கொண்டால் சிறுநீரகக்கற்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

**உரையாடல்: எஸ்.கோகிலா**



# கோழியில்லாமல் கிடைக்கும் முட்டை..!

முட்டையின் வெள்ளைக்கருவிலுள்ள புரதம் நமக்கு ஊட்டம் தரக்கூடியது. இதனால்தான் பலரும் 'ஓவால்புமின்' என்ற புரதத்திற்காக முட்டையை உணவில் தினமும் சேர்த்துக் கொள்கின்றனர்.

ஆனால், அந்த புரதத்துக்காக, ஏராளமான கோழிகளை, பண்ணைகளில் வளர்க்கவேண்டியுள்ளது. முட்டை, முக்கால்வாசி இறைச்சி போக, மீதி எல்லாம் சுற்றுச்சூழலுக்குக் கேடுதரும் கழிவுகளாக்கப்படுகின்றன.

இந்த அவலத்தைப் போக்க, தாவரங்கள் மூலமாகவே முட்டையிலுள்ள புரதத்தை வளர்த்தெடுக்க சில விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

அண்மையில் பின்லாந்தின் ஹெல்சிங்கி பல்கலை மற்றும் பின்லாந்தின் வி.டி.டி. தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள், பூஞ்சையிலிருந்து 'ஓவால்புமின்' புரதத்தை தயாரித்துள்ளனர். கோழியில் 'ஓவால்புமின்' ஐ உற்பத்தி செய்ய உதவும் மரபணுவை எடுத்து, 'டிரைகோடெர்மரீசி' என்ற பூஞ்சையில் புகுத்தி, விஞ்ஞானிகள் இதனை சாதித்துள்ளனர்.

மேலும், அந்த பூஞ்சை சுரந்த 'ஓவால்புமின்' புரதத்தை சேகரித்து, ஒரு பொடியாகத் தயாரித்தனர். இந்தப் பொடியை சோதித்ததில், கோழி முட்டையின் வெள்ளைக்கரு பொடியைப் போன்றே பல அம்சங்களைக் கொண்டிருந்தது.

பூஞ்சைப் பொடியை முட்டைப் பொடியைப் போலவே, தண்ணீர் கலந்து அடித்து கிறீம் போன்று தயாரிக்க முடிந்தது. பூஞ்சையில் விளையும் 'ஓவால்புமின்' புரதத்தை இந்த உலகம் உணவாக ஏற்றுக்கொண்டால் என்னவாகும்? கோழிப்பண்ணை மற்றும் தீவனத்திற்காக பயன்படுத்தப்படும் நிலத்தில் 90 சதவீதம் மிச்சமாகும். பண்ணைத் தொழில்களால் வெளியேற்றப்படும் பசுமைக்குடில் வாயுக்களில் 30 - 55 சதவீதம் தடுக்கப்படும். மொத்தத்தில் பூஞ்சைப் புரதம் பூமியை மாசு குறைந்ததாக ஆக்கும்.



# இன்றைய நாளில்...

- 1889 – கொலம்பியா கிராமபோன், வொஷிங்டனில் முதன்முதலில் தயாரிக்கப்பட்டது.
- 1901 – 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81ஆவது அகவையில் காலமானதையடுத்து, அவரது மூத்த மகன் ஏழாம் எட்வர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.
- 1905 – இரத்த ஞாயிறு: சென் பீட்டர்ஸ்பேர்க்கில் ரஷ்யப் பேரரசருக்கு எதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது. 200 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். '1905 - ரஷ்யப் புரட்சி' ஆரம்பமானது.
- 1945 – இலங்கையில் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான சோல்பரி ஆணைக்குழு முதன்முதலாக கொழும்பு நகர மண்டபத்தில் கூடியது.
- 1968 – அப்பல்லோ 5 விண்கலம், முதலாவது நிலாக்கலத்தைத் தாங்கி விண்வெளிக்கு சென்றது.
- 1973 – அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்பட்டது.
- 1999 – இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் அவுஸ்திரேலிய கிறிஸ்தவப் போதகர் கிரஹாம் ஸ்டைன்ஸ் என்பவரும், அவரது இரு மகன்களும் இந்து தீவிரவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.
- 2003 – பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

# நக்கல் நமசிவாயம்

அரசாங்க ஆக்களும் இப்ப எதிர்க்கட்சி ஆக்கள் போல பேச ஆரம்பிச்சிருக்கினம்..!



# கலைஞர்களின் படைப்புகளினாலேயே வரலாறு வண்ணமயமானது!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம்





இலவசமாக வழங்கப்படும் மருத்துவ உதவி விபத்துக் காப்புறுதியானது கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலைஞர்களுக்கான காப்புறுதி பத்திரம் வழங்கல், தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் www.heritage.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (20) அலரி மாளிகையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது பிரதமரின் தலைமையில் கலைஞர்களுக்கான காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது. பிரதமர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் நிசாந்தி ஜயசிங்க ஆகியோரும் காப்புறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சொஃப்ட்லொஜிக் காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்படும் 50 காப்புறுதிப் பத்திரங்கள் நேற்றைய தினம் கலைஞர்களுக்கு குறியீட்டு ரீதியாக வழங்கிவைக்கப்பட்டது. தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் www.heritage.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளம் இதன்போது பிரதமரின் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியிட்டு வைக்கப்பட்டு நடிகர் ரவீந்திர ரன்தெனிய மற்றும் நடனக் கலைஞர் கொடஹேவகே இராஜாங்க அமைச்சர் கொடஹேவகே கிரெண்டின் சில்வா ஆகியோரின் தரவுகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவினால் அங்கீகரிக்கப்பட்டு தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு,

கலாசார பாரம்பரியம் நிறைந்த பெருமைமிக்க வரலாற்றை நமது நாடு கொண்டுள்ளது. உங்களைப் போன்ற கலைஞர்களின் படைப்புகளால் இந்த வரலாறு வண்ணமயமானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு தேசமாக நாம் இன்னும் உலகின் முன் ஒரு சிறந்த கலாசாரத்திற்கு உரிமை கோரும் ஒரு தேசமாகும். இலக்கியம், நடனம், நாடகம், கலை, பொம்மலாட்டம், சிற்பம், இசை மற்றும் சினிமா ஆகியவற்றின் மூலம் சமூக யதார்த்தத்தை ஆக்கப்பூர்வமாக மக்களிடம் கொண்டு செல்ல கலைஞர்கள் பெரும் முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சியை மக்கள் இன்னும் இரசிக்கிறார்கள். நம் நாட்டின் கலைஞர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் தங்கள் கலைக்காக அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் பணிபுரியும் துறையை மதிக்கிறார்கள்.

அத்துடன் அன்பு செலுத்துகின்றனர். அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை விட கலைக்கு மதிப்பளித்தனர். கடந்த காலங்களில் இந்த மக்கள் கொவிட் தொற்றுநோயால் பல சிரமங்களை எதிர்கொண்டதை நாம் அறிவோம். நாம் அது குறித்து கவனம் செலுத்தினோம். எமது இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கலைஞர்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வந்தார்.

எத்தனை சிரமங்கள் இருந்தபோதிலும், இந்த கலைஞர்கள் கடந்த காலங்களில் வீடுகளில் முடங்கிக்கிடந்த மக்களின் மனதை குணப்படுத்த பல்வேறு கலை படைப்புகளை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தனர். அதுமாத்திரமன்றி மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை மையங்களில் உள்ள கொவிட் நோயாளிகளின் மனதைக் குணப்படுத்த சுகாதாரத் துறையுடன் இணைந்து செய்த தியாகங்களை நாம் மறக்க முடியாது. குறிப்பாக அத்தகைய கலைஞர்களை நினைத்து பெருமை கொள்கிறோம்.

அதனாலேயே அரசாங்கத்தினால் காப்புறுதி கட்டணங்கள் செலுத்தப்படும் பிரேக்ஷா காப்புறுதித் திட்டத்தை வரலாற்றில் முதல் முறையாக எம்மால் அறிமுகப்படுத்த முடிந்தது. அன்று நாடகத் துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த மருத்துவ உதவி, விபத்து காப்புறுதி இன்று அனைத்துக் கலைஞர்களுக்குமான ஒரு மாபெரும் படியாக மாறியுள்ளது. எங்கள் அன்பிற்குரிய கலைஞர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் இந்த காப்புறுதியானது, கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசு என்று நாங்கள் நம்புகிறோம்.

அது மாத்திரமன்றி, இந்தக் காப்புறுதியை வழங்கும்போது நாம் ஒரு கலைத்துறைக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. கிராமிய கலைகள் குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தினோம். அதுவே இந்தத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனை என்று நான் நம்புகிறேன். அதுமட்டுமின்றி, நிரந்தர வருமானம் இல்லாத குறைந்த வருமானம் கொண்ட கலைஞர்களுக்கும், கொவிட் தொற்றுநோயால் தொழில் மற்றும் வேலை பாதுகாப்பை இழந்தவர்களுக்கும் இந்த காப்புறுதிம் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும். கொவிட் தொற்றினால் நம் நாட்டில் பல கலைஞர்கள் உயிரிழந்துள்ளனர். சுகாதார வழிகாட்டுதலின் பல்வேறு கட்டுப்பாடுகளால், சில கலைஞர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் வாய்ப்பும் கிடைக்காதுபோனது. அவர்களை நாம் மரியாதையுடன் நினைவுகூர வேண்டும்.

ஒவ்வொரு கலைஞனும் இந்நாட்டின் வளம். அவர்களின் சித்தாந்தங்கள் ஒட்டுமொத்த சமூகத்திலும் காணப்படுகின்றன. சமூகத்தில் உள்ள பிற மக்களுக்கு இருக்கும் அதே உரிமை கலைஞர்களுக்கும் உண்டு. எனவே, நாட்டில் ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்க கலைஞர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். இந்த உரிமை கலைஞர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட ஓர் இருண்ட கடந்த காலம் நம் நாட்டிற்கு இருந்தது. அவ்வாறானதொரு நிலை இன்று இல்லாவிட்டாலும் அதனை முழுமையாக மறந்து எதிர்காலத்தை நோக்கி நகர முடியாது.

அன்று கலைக்குக் கட்டுப்பாடுகளை விதித்து, கருத்து சுதந்திரத்தை மட்டுப்படுத்தி உங்களையும் கட்டுப்படுத்துவதற்கு சிந்தித்த பழைய சித்தாந்தங்களை மீண்டும் அலசுவதற்கு உங்களுக்கு அவசியமில்லை என்பதை நாம் அறிவோம். அன்று முதல் இன்று வரை நாம் கலைக்கும், கலைஞர்களுக்கும் வரையறைகளை விதிக்க முற்படவில்லை. நாளையும் இதே நிலைப்பாட்டிலேயே இருப்போம். ஒரு உண்மையான கலைஞனின் இதயத் துடிப்பை நாம் அறிவோம். இவர்களில் பலர் எனக்கு அப்போதிருந்து தெரிந்தவர்கள். அதனால் உங்கள் இதயத்துடிப்பை நான் அறிவேன். ஒரு காலத்தில் நமது தொலைக்காட்சி நாடகத் துறையே கொந்தளிப்பில் இருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அக்காலகட்டத்தில் வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களை இங்கு ஒளிபரப்பியதன் மூலம் எமது நாட்டுத் தொலைக்காட்சி நாடகக் கலை பெரும் சவாலை எதிர்கொண்டது.

இவை கலைஞர்களின் வாழ்க்கையையும் பாதித்தன. அன்றைய காலத்தில் வெளிநாட்டுத் தொலைத்தொடர்புகளுக்கு வரி விதிக்க நாம் எடுத்த நடவடிக்கைகளினால் இன்று பெரும் உள்ளூர் படைப்புகள் உருவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எமது நாட்டின் கலைஞர்களுக்காக ரன்மிஹிதென்னவினை அமைத்தோம். அப்படியொரு டெலி கிராமத்தின் அவசியத்தை நாங்கள் நன்கு உணர்ந்திருந்தோம். கலைஞர்களும் டெலி கிராமத்தின் அவசியத்தை அவ்வப்போது எங்களிடம் சுட்டிக் காட்டினார்கள். அன்று நாம் கட்டிய ரன்மிஹிதென்னவினை நமது நாட்டிலுள்ள கலைஞர்கள் மற்றும் அண்டை நாடான இந்தியாவில் உள்ள கலைஞர்களும் பயன்படுத்திக் கொண்டனர். இம்முறை நாம் ஆட்சிக்கு வரும் போது இந்த இடங்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டிருந்தன.

நம் நாட்டில் சினிமா என்பது 75 வருடங்களாக ஒரு கலையாகவே காணப்பட்டது. நீண்ட காலமாக திரையுலகில் இருக்கும் கலைஞர்களின் பொதுவான கோரிக்கை சினிமாவை ஒரு தொழிலாக அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான். நம் நாட்டு சினிமாவை வணிகரீதியாக மீண்டும் கட்டியெழுப்ப சினிமாவை ஒரு தொழிலாக மாற்ற வேண்டும் என்று திரையுலகினர் விடுத்த கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டோம். கலைஞர்களுக்கான தரவுத்தளத்தை உருவாக்குவதும் அரசாங்கமாக நாம் பெற்ற மாபெரும் சாதனையாகும். முன்பு நம் நாட்டில் உள்ள கலைஞர்களின் தகவல்களை இப்படி ஒரே இடத்தில் பெறுவது சாத்தியமில்லை. அது மட்டுமன்றி, தேசிய மற்றும் சர்வதேச அளவில் கலைஞர்களின் படைப்புகளுக்கு டிஜிட்டல் அப்ளிகேஷன் மூலம் வணிக மதிப்பைக் கண்டறிவதற்கான களத்தை இன்று நாங்கள் அமைத்துள்ளோம்.

இவ்விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் கலைஞர்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து அவர்களுக்காக இவ்வாறான நற்செயலை செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எமது இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சின் செயலாளர், இராஜாங்க அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் மேலும் பல கலை படைப்புகளை உருவாக்குவதற்கான ஆரோக்கியமான மற்றும் வளமான எதிர்காலம் கிட்ட பிரார்த்திக்கிறேன் என்றார்.

## “ஆரோக்யா” நூல் வெளியீட்டு விழா







விலங்குகளுக்கான தார்மீகக் குரல் (Dharma Voices for Animals) அமைப்பினால் முழுமையான உணவுத்திட்டங்களை உள்ளடக்கிய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (20) கொழும்பில் நடைபெற்றது. “ஆரோக்யா” என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் முதற்தர சைவ உணவு வகைகளுக்கான குறிப்புகள் நூற்றுக்கும் மேற்பட்டவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த உணவுத் திட்டங்களில் விலங்குகளின் பால், இறைச்சி, கொழுப்பு கலவைகள் எவையும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பது விசேட அம்சமாகும்.

ஆரோக்கியா உணவுத் திட்ட நூலின் முதற்பிரதியை (Dharma Voices for Animals) அமைப்பின் ஸ்தாபகர் பொப் அயிஸஸ் வெளியிட, அதனை பேராதெனிய ஸ்ரீசுபோதாராம சர்வதேச பௌத்த மத்திய நிலைய பொறுப்பதிகாரி அதி வணக்கத்துக்குரிய வத்தேகம ஸ்ரீதம்மாசாவ தலைமை தேரர் பெற்றுக்கொண்டார். இந்நூலின் 10 ஆயிரம் பிரதிகள் நாடெங்கிலும் உள்ள மத நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் இலங்கைக்கான அபிவிருத்தித் திட்ட ஆலோசகரும், அமைப்பின் உறுப்பினருமான சமித் நாணயக்கார, இலங்கைக்கான அமைப்பின் இயக்குனர் சானிக்கா கமகே மற்றும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வஜிர அரன்தர ஆகியோர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தேசிய உணவு கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் தேசிய தொடர் நிகழ்ச்சியின் முதல் அம்சமாக இந் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. அடுத்த நிகழ்வாக இன்று 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை “ஆரோக்கிய உணவுத்திருவிழா” மினுவங்கொட நகரசபை வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் மக்களின் உணவுப் பழக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் விலங்குகளுக்கான தார்மீகக் குரல் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

## மறைத்து வைக்கப்பட்ட 480 ரூபா பால்மா தொகையை 540 ரூபாவுக்கு விற்பனை செய்த வியாபாரிக்கு எதிராக வழக்கு

பால்மா விலை அதிகரிப்புக்கு முன்னர் பழைய 480 ரூபா விலையிலிருந்த பால்மா தொகையை மறைத்து வைத்திருந்து பின்னர் அதிக விலையுடனான ஸ்டிக்கர்களை ஒட்டி பழைய விலைக்கு மாறாக பால்மா பக்கெட்டை ஒன்று 540 ரூபா என்ற அடிப்படையில் விற்பனைசெய்த தங்காலை பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் நுகர்வோர் அதிகாரசபையின் ஹம்பாந்தோட்டை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. பால்மா தட்டுப்பாடு ஏற்பட்ட காலப்பகுதியில் மறைக்கப்பட்ட பால்மா தொகையினூடாக அதிக இலாபத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில், பால்மா தொகையை மறைத்து வைத்திருந்து பால்மா விலை அதிகரிக்கப்பட்டதன் பின்னர் புதிய விலைகொண்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுகர்வு பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை மாற்றுதல் மற்றும் புதிய விலையுடனான ஸ்டிக்கர்களை ஒட்டுதல் ஆகிய நுகர்வோர் சட்டக்கோவையின் அடிப்படையில், தவறு என்பதுடன் குறித்த விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக எதிர்வரும் 26ஆம் திகதி தங்காலை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

நுகர்வோரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விற்பனை நிலையத்தில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கிடைத்த தகவலறிந்து, அந்த சந்தர்ப்பத்தில் வருகை தந்த நுகர்வோருக்கு 400 கிராம் பால்மா பக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய விலையான 480 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வெலிகமவில் நபரொருவர் சுட்டுக் கொலை

வெலிகம, மெதிக துர்க்கி கிராமத்தில் 46 வயதுடைய நபரொருவர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (20) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கொன்றில் ஆஜராகிய பின்னர், மீண்டும் தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணை முடிவடைந்ததன் பின்னர் மற்றொரு நபரொருவருடன் மோட்டார் சைக்கிளொன்றில் அவர் வீடு திருப்பியுள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் சாரதி குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருக்கலாமா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவரின் மனைவி மற்றும் குழந்தைகள் உறவினரின் திருமண நிகழ்வுக்கு சென்றிருந்த நிலையிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெலகம பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் நேற்று (21) காலை கைது செய்யப்பட்டுள்ளார். மிதிகம, பமுனுகொட பிரதேசத்தில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பமுனுகொட மாத்தயா என்றழைக்கப்படும் சுதேஷ் மதுசங்க (வயது 28) எனும் குறித்த சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், அவரிடமிருந்து பயன்படுத்தப்படாத கைக்குண்டும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் சிஷ்சங்க என்றழைக்கப்படும் நிவுசன் குமார என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 21.01.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 3 56 | 036 3 4 |
| கனேடியன் டொலர் | 046 3076 | 052 2173 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 6340 | 21 68 |
| யூரோ | 113 0010 | 121 8306 |
| ஜப்பான் யென் | 0 6223 | 0 6875 |
| சிங்கப்பூர் டொலர் | 035 8727 | 040 6 25 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 4636 | 166 030 |
| சுவிஸ் பிராங்க் | 104 1661 | 111 8287 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 426 6374 |
| குவைட் | குவைட் தினார் | 56 536 |
| ஓமான் | ஓமான் றியால் | 415 5054 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 5742 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 43 383 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 0883 |

## சட்டவிரோத மீன்பிடிக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள் கடற்படையினரால் மீட்பு





மன்னார் மற்றும் இறக்கண்டி பிரதேசத்தில் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, வெடிபொருட்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த 11 வோட்டர் ஜெல் என்றழைக்கப்படும் வெடிபொருள் குச்சிகள் உள்ளிட்ட மேலும் சில வெடிபொருட்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் சிலரினால் வெடிபொருட்களை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினூடாக கடற்சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதுடன், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை இடம்பெறும் பிரதேசங்களில் மீன் வளமும் பாதிப்படைகின்றது. அதன்காரணமாக, வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பது கடல் சூழலுக்கு மாத்திரமின்றி எதிர்காலத்தில் மீன் உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படுமென கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இறக்கண்டி பிரதேசத்தில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கடற்கரை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 09 வோட்டர் ஜெல் குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி மன்னார், கொன்னப்பிட்டி கடற்கரை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, வெடிபொருட்களை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த 02 மோட்டார் ஜெல், 03 மின்சாரமற்ற டெட்டனேட்டர் உள்ளிட்ட பொருட்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# அரசை விட்டு வெளியேறுவதாக மிரட்டாது முடிந்தால் வெளியேறி காட்டுங்கள்

## சு.கவிற்கு முன்னாள் மாத்தளை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஹரிஸ் சவால்

(மாத்தளை நிருபர்)

அரசை விட்டு நாம் வெளியேறினால் அரசு ஆட்டம் காணும் என மிரட்டிக்கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், முடியுமானால் அரசை விட்டும் வெளியேறிக் காட்டுங்கள். அப்படி வெளியேறினால் மைத்ரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியின் அரசியல் பாரம் எவ்வளவு என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியுமென மாத்தளை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சியாட் எம் ஹரிஸ் தெரிவிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ஆட்சியில் இருக்கும் அரசை விமர்சிப்பதும் அரசின் தற்காலிக பின்னடைவையும் சாதகமாக பயன்படுத்தி ஆட்சியை கவிழ்த்திட காய் நகர்த்துவதும் சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தெரிவிக்கும் கருத்துகள் இவர்கள் இருதலைக் கொல்லி பாம்புகள் என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.



நாடாளுமன்றத்திற்கு வெளியே நாட்டின் நாலா திசைகளிலும் ஆட்சியில் இருக்கும் அரசையும் ராஜபக்ஷக்களையும் விமர்சித்து அரசை விட்டு வெளியேறுவோம் என்றும் ஆட்சியாளர்களுக்கு கிடைத்த 69 இலட்சம் வாக்குகளில் 15 இலட்சத்துக்கும் மேலான வாக்குகளுக்கு தாங்களே உரிமையாளர்கள் எனவும் மார்த்தட்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், தாங்கள் அரசை விட்டு வெளியேறினால் அரசு ஆட்டம் காணப்படும் என தெரிவிக்கின்றார்கள். முடியுமானால் அரசை விட்டு வெளியேறி அரசை ஆட்டம் காண வையுங்கள்.

வாயால் பேசக்கூடிய சுதந்திரக் கட்சியினருக்கு செயலால் எதையும் சாதிக்க முடியாது என்பதை கடந்தகால வரலாறுகள் கூறுகின்றன. ஈஸ்டர் தினத்தாக்குதலின் போது, அதற்கு பதில் கூறவேண்டிய பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கு உண்டென ஆட்சியாளர்கள் கூறும்போது தன்னை சிறையில் அடைக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றார்கள் என தெரிவிக்கும் மைத்ரிபால சிறிசேன, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போதும் மொட்டு கட்சிக்கு வாக்களித்துவிட்டு இன்றைய ஆட்சியை விமர்சிப்பதும் கடந்த 18ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வின்போது ஜனாதிபதிக்கும் ஆட்சியாளர்களுக்கும் உந்துசக்தியாக செயற்படுவோம் என்பதை கூறுவதும் மைத்ரிபால அணியினரின் அரசியல் நாடகத்தின் இரட்டை வேடத்தை நம் நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டுள்ளார்கள்.

கடந்த நல்லாட்சியின்போது மைத்ரிபால சிறிசேனாவின் அரசியல் அரங்கேற்றங்களை இந்நாட்டு மக்கள் புரிந்துள்ளார்கள் என்பதும் இந்நாட்டு வாக்களார்கள் கோமா நிலையில் இல்லை என்பதையும் மைத்ரிபால அணியினர் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். முடியுமானால் வாய் வீரம் பேசாமல் அரசை விட்டு வெளியேறி காட்டுங்கள் என சியாட் ஹரிஸ் மேலும் தெரிவித்தார்.

# மாத்தளை மாவட்ட விவசாயிகளின் விளைச்சல்கள் வனவிலங்குகளால் சேதம்

## வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கவலை

(மாத்தளை நிருபர் )

நாட்டில் விவசாயிகள் எதிர்நோக்கிவரும் பசளைக்கான பிரச்சினைகள் தலைதூக்கி இருக்கும் நிலையில், மாத்தளை மாவட்ட விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு தங்களது குடும்ப வாழ்வாதாரத்தை கொண்டுசெல்லும்போது காட்டு யானைகள் மற்றும் வனவிலங்குகளினால் தங்களின் விவசாய உற்பத்திகள் சேதப்படுத்தப்பட்டு வருவதால் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துவருவதாக தெரிவிக்கின்றனர்.

கொவிட்-19 ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் தங்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பெரும் சிரமங்களுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் தங்களது விவசாய உற்பத்திகளான மரக்கறி வகைகள், வாழை, தென்னை, பலா மரங்களையும் கன்றுகளையும் காட்டு யானைகளும் வனவிலங்குகளும் சேதப்படுத்தி வருவதால் தங்களது தினசரி வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில் நாவுல, லக்கல, வில்கமுக, தம்புள்ளை, கலேவல போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் மேற்கொண்ட விவசாய உற்பத்திகளை அறுவடைசெய்ய முடியாததொரு இக்கட்டாண சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாநகரம் உட்பட நகரின் ஏனைய பகுதிகளிலும் உக்குவளை, இரத்தோட்டை, யட்டவத்த ஆகிய செயலகப் பிரிவுகளின் பல கிராமங்களுக்கு குரங்குகள் ஊடுருவி உள்ளதால், இக்குரங்களின் மூலமும் தங்கள் பயிர்ச்செய்கைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மாத்தளை நகரின் சில பகுதிகளில் குரங்குகளின் ஆக்கிரமிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் மேற்படி குரங்குகளினால் பகல்வேளைகளில்கூட வீடுகளின் கதவுகளை திறந்துவைக்க முடியாத சூழல்நிலை ஏற்பட்டுள்ளதுடன், சிலசமயங்களில் வீடுகளில் சமையலறை பகுதிகளுக்கு உட்புகுந்த குரங்குகள் உணவு பண்டங்களை எடுத்துச்செல்வதோடு சமையலறை பகுதி உடமைகளுக்கு சேதங்கள் விளைவிப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

எனவே, இது சம்பந்தமாக அரச மற்றும் உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டபோதும் காட்டு யானை, குரங்கு மற்றும் ஏனைய வனவிலங்குகளினால் தங்களுக்கு எற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்ய எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# சர்வதேச குத்துச்சண்டையில் தங்கம் வென்ற இந்துகாதேவிக்கு அரவிந்தகுமார் எம்.பி. வாழ்த்து

(எம். செல்வராஜா)



சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில், 'தங்கம்' வென்ற தமிழ் வீராங்கனையான முல்லைத்தீவைச் சேர்ந்த கணேஸ் இந்துகாதேவிக்கு, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில்,

"நாட்டின் வடபகுதியில் முல்லைத்தீவு மண்ணைச் சார்ந்த கணேஸ் இந்துகாதேவி பெற்ற இவ்வெற்றியானது, நாட்டிற்கு மட்டுமன்றி முழு தமிழ் இனத்திற்கே கிடைத்த பெரும் வெற்றியாகும்.

கிரிக்கெட் போட்டியில் சாதனை படைத்த முத்தையா முரளிதரனுக்கு அடுத்தபடியாக சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் கணேஸ் இந்துகாதேவி சாதனை படைத்துள்ளார். இது எமக்கு கிடைத்த பெரும் சாதனையேயாகும். இவ்வகையில் எம்மவர்களின் சாதனைகள் மேலோங்க வேண்டும்.

பாகிஸ்தானின் லாகூர் என்ற இடத்தில் 18ஆம் திகதி நடைபெற்ற 25 வயதுக்குட்பட்ட 50, 55 கிலோகிராம் எடைப்பிரிவின் சர்வதேச குத்துச்'சண்டைப் போட்டியிலேயே கணேஸ் இந்துகாதேவி தங்கம் வென்று சாதனைப் படைத்திருக்கின்றார். இச்சாதனை மென்மேலும் வளர்ச்சியடைந்து பல்வேறு துறைகளில் சாதனைகளைப் படைக்க வேண்டும். இச்சாதனை ஓட்டுமொத்த இனத்திற்கே கிடைக்கும் பெருமையாகும்.

ஏழ்மை நிலை, வாழ்வாதாரங்களின் பின்தங்கிய போக்கு, யுத்த அவலங்களின் வடுக்கள் மாறாத சூழல் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சி வளங்கள், ஆரோக்கியச் சூழலற்ற நிலை என்று பட்டியலிட்டு செல்லும் நிலையிலும் சர்வதேச ரீதியில் தங்கம் வென்றதானது பெருமைக்குரிய விடயமாகும்.

பெருந்தோட்ட மக்களினது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது சார்பாகவும், எனது மக்கள் சார்பாகவும் கணேஸ் இந்துகாதேவிக்கு இனிய நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.





கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்திற்குட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலையைச் சேர்ந்த 320 மாணவ, மாணவிகளுக்கு பூஸ்டர் தடுப்பூசி நேற்று (21) செலுத்தப்பட்டது. (படங்கள் : தலவாக்கலை நிருபர்)

# வவுனியா பூந்தோட்டத்தில் தேசிய டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுப்பு

(வவுனியா நிருபர்)

'டெங்கு நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம். நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் செய்வோம்' எனும் தொனிப்பொருளில் நகரசபையினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (20) காலை 8.45 மணியளவில் இடம்பெற்றது.

அந்வகையில் வவுனியா நகரசபையினரால் முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத்திட்டம் நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர கலந்து சிறப்பித்திருந்ததுடன், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தெய்வேந்திரம் ரதீஸ்வரன் மற்றும் வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வவுனியா பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் மற்றும் விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

நகரசபை செயலாளர் இ.தயாபரனின் நெறிப்படுத்தலின்கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தில் பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் டெங்கு பெருகும் இடங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றி டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர். அதனைத்தொடர்ந்து அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் வழிகாட்டலில் வவுனியா பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பூந்தோட்டம், பெரியார்குளம், குடியிருப்பு ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டது.

வீடுகளில் டெங்கு பரவும் இடங்கள் அடையாளம் காணப்படின், வீட்டின் உரிமையாளருக்கு முதலாவது எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன், தேவையற்ற கழிவுகள் நகரசபை வாகனத்தில் ஏற்றப்பட்டன. மேலும் கிணறுகளில் மீன்கள் விடும் நடவடிக்கையும் இடம்பெற்றிருந்ததுடன், வீதியோரங்களில் காணப்படும் கழிவுகள் நகரசபை சுகாதாரப் பணியாளர்களினால் அகற்றப்பட்டன.

# ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை

(சாவகச்சேரி நிருபர்)

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகமும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நாளை 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.32 மணிமுதல் 11.22 மணிவரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த புதன்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் இன்று 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தலாம். இக்கும்பாபிஷேகத்தை கல்வியங்காடு சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ணகுருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் ஆரம்பமான கடந்த புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் ஆலயத்தின் மேற்குப் புறவாசலில் புதிதாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவு திறப்பு விழாவும் கலாசார மண்டப புகுவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. நேற்று முன்தினம் வியாழக்கிழமை பஞ்சதள நாயகன் இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# தேசிய டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மானிப்பாய் பொதுச்சந்தையில்







(யாழ் நிருபர்)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (20) யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொதுச் சந்தையில் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது டெங்கு விழிப்புணர்வு வாசகங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு, டெங்கு ஒழிப்பு சம்பந்தமான வீதி நாடகமும் நடத்தப்பட்டது.

பின்னர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் வடமாகாண பிரதம செயலாளருக்கிடையில் நினைவுச்சின்னங்கள் பரிமாறப்பட்டதோடு சந்தையைச் சுற்றிய வளாகமும் சுத்தப்படுத்தப்பட்டது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபனேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, சிறப்பு அதிதிகளாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன், யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மு.சுலோச்சனா, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிந்துஷா, வலிகாமம் தென்மேற்கு சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







தைப்பொங்கலை முன்னிட்டு பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் நேற்று (21) சிறப்பு விழாவொன்று அதிபர் திருலோகச்சங்கர் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள் : பதுளை நிருபர்)

# கிளிநொச்சி மார்பு – பாலியல் நோய் சிகிச்சை நிலையங்களில் பாரிய தீ




(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் மற்றும் பாலியல் நோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றில் நேற்று முன்தினம் (20ஆம் திகதி) இரவு ஏற்பட்ட தீ விபத்தில் மருத்துவ உபகரணங்கள், நோயாளர்களின் ஆவணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் என கோடிக்கணக்கான பெறுமதியான பொருட்கள் எரிந்து அழிந்துள்ளன.

அன்று நள்ளிரவு சுமார் 10.30 மணியளவில் வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள மேற்படி சிகிச்சை நிலையங்களில் பணிகள் நிறைவுபெற்று சிகிச்சை நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தபோதே இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.

சம்பவ இடத்திற்கு கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினரும், இராணுவத்தினரின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து அதிகாலை ஒரு மணியளவில் தீயை முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

தற்போது பொலிஸாரால் குறித்த பிரதேசம் எவரும் உட்செல்லாத வகையில் சீல் வைக்கப்பட்டுள்ளதோடு, கொழும்பிலுள்ள அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஆய்வுக்குப் பின்னரே தீப் பரவல் தொடர்பில் தெரிவிக்க முடியும் என வைத்தியசாலையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், 2010 தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான காச நோய் மற்றும் ஏனைய மார்பக நோயாளர்கள் தொடர்பான ஆவணங்களும் எரிந்து அழிந்துள்ளன. மேலும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த எச்.ஐ.வி. பரிசோதனை ஆய்வுகூடமும் எரிந்துள்ளது. இந்நிலையில் மீண்டும் குறித்த சிகிச்சைகளை ஆரம்பிப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் நேரடியாகச் சென்று நிலைமைகளை பார்வையிட்டுள்ளனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து காரைநகரில் போராட்டம்




(யாழ். நிருபர்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், அவற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியும் காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

காரைநகர் பிரதேச சபையின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள், பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகம் வரையில் பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலகத்திற்கு பேரணியாகச் சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதனால் எமது கடல் வளங்கள், கடல் சூழல், உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றோம். பல தரப்புகளிடமும் மகஜர்களை கையளித்துள்ளோம். இருந்தும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்குபடுத்தல் தடைச்சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபா. அதற்கான நஷ்டஈடுகளை பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வைப் பெற்றுத்தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் காத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

# வவுனியாவில் டிசம்பர் முதல் தற்போது வரை 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மகேந்திரன் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் டிசம்பர் மற்றும் தற்போது வரை 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பெரியார்குளத்தில் நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாகவே டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை சுகாதாரத் திணைக்களத்தினாலேயே செய்யவேண்டும் என்று எல்லோரும் எண்ணுகின்ற நிலையில், தற்போது நகரசபை இவ்வாறான நிகழ்வுகளை முன்னின்று செய்வது வரவேற்கத்தக்க விடயம். டெங்கு என்பது சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, இது ஒரு சமூகப் பிரச்சினையாகும். ஏனென்றால் நாங்கள் எங்களுடைய திண்மக்கழிவுகளை அகற்றுவது தொடர்பான சரியான முகாமைத்துவம் இல்லாமை காரணமாக டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெருகுகின்றன.

டெங்கு நோயை பரப்புகின்ற நுளம்புகளை நாங்கள் தடுப்பதன் மூலமே டெங்கு நோயை தடுக்க முடியும். மேலும் இதற்குரிய முயற்சியாகவே நகரசபைத் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை டெங்கானது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், எமக்கு அண்மையிலுள்ள யாழ். மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் அதிகமாக காணப்படுகின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் கடந்த வருட ஆரம்பத்தில் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பைவிட இந்த ஆண்டு ஆரம்பத்தில் மிக அதிகமாக காணப்படுகின்றது.

இதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. அதேபோன்று கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.

மேற்கூறிய மாவட்டங்களுக்கு வவுனியா மாவட்டத்தில் இருந்து பலர் பல்வேறு தேவைகளுக்காக சென்று வரவேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு போய் வருபவர்கள் மூலமாகவே வவுனியாவில் டெங்கு நோய் தொற்றாளர்களை அடையாளங்கண்டுள்ளோம்.

கடந்த மாதத்தைப் பொறுத்தவரை வவுனியா மாவட்டத்தில் 09 பேரே டெங்கு நோய் தொற்றாளர்களாக அடையாளங்காணப்பட்டனர். இவ்வருட ஜனவரி மாத ஆரம்பம்முதல் தற்போதுவரை 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாத முடிவில் குறித்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை




(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தரம் 7 தொடக்கம் 10 வரை கற்கின்ற பாடசாலை மாணவர்களுக்கான பைசர் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை (21) காலை முதல் மன்/லூசியா மகாவித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் குறித்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தரம் 7 தொடக்கம் 10வரை கற்கின்ற 12 தொடக்கம் 16 வயதுடைய மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைசர் தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி செலுத்தும் நிலையங்களான பாடசாலைகளில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், இராணுவம் மற்றும் விமானப்படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் பைசர் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 8,500க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுவான் - மயிலிட்டி வீதி புனரமைப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்

## வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன்




(யாழ். நிருபர்)

தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி பாதையை ஏற்படுத்த முடியாது. உண்மையான வீதியூடாக அதனை செய்யவேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியை திறந்துவிட்டேன் என பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

கட்டுவன் - மயிலிட்டி வீதிப் புனரமைப்பு தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதி விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக காணப்பட்டிருந்தது.

தற்போது திடீரென வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி மன்றத்துக்கோ பிரதேச செயலகத்திற்கோ எந்தவித அறிவிப்பையும் செய்யாமல் இராணுவத்தினரின் உதவியுடன் அத்துமீறி மக்களுடைய காணி ஊடாக வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இராணுவத்தினர் தனியார் காணி ஊடாக வீதியை புனரமைப்பதனால் 9 பொதுமக்களின் ஏறத்தாழ 4 ஏக்கர் வரையான விவசாய நிலப்பகுதி துண்டாடப்படுகிறது.

வலி. வடக்கில் 3,000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் 7,000 மக்கள் மீளக்குடியமர வேண்டியிருக்கின்றது. இது ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்திற்கு மாறான செயற்பாடாகவே காணப்படுகின்றது.

இன்றைய வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் மக்களுடைய முறைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இந்த வீதி புனரமைப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்களின் காணிகளை எந்த காலத்திலும் துண்டாட இடமளிக்க முடியாது.

நேற்று முன்தினம் ஊடகங்கள் வாயிலாக அங்கஜன் இராமநாதன், எங்களுடைய முயற்சியால் இந்த வீதி விடுவிக்கப்படுவதாக ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். இது பொய்யான செய்தி. தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி பாதையை ஏற்படுத்த முடியாது. உண்மையான வீதியூடாக அதனை செய்ய வேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியை திறந்துவிட்டேன் என பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக அதை நிறுத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் என்ற ரீதியில் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதேவேளை, இதில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், எமது ஒப்புதலின்றி சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் அரசும் அரச படையினரும் பலாத்காரமாக எமது காணியை கைப்பற்றியுள்ளனர். இந்நடவடிக்கைக்கு எதிராக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் - என்றார்.

# கிளிநொச்சி முச்சக்கரவண்டி விபத்தில் சாரதி படுகாயம்



கிளிநொச்சியில் முச்சக்கரவண்டி விபத்தில் சாரதி படுகாயமடைந்துள்ளார். முச்சக்கரவண்டி வட்டக்கச்சி சென்று கிளிநொச்சி நோக்கி திரும்புகையில், பஸ் ஒன்றுக்கு இடம் கொடுக்க முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து சம்பவம் நேற்று அதிகாலை நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி குளத்தின் துருசு பகுதியிலுள்ள பாலத்தில் விழுந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி உதயநகர் மேற்கு பகுதியைச் சேர்ந்த தியாகராசா சிவநாதன் என்ற 54 வயதுடையவரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார். இவரை சிகிச்சைக்காக அனுமதிக்க முன் எடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இவருடன் பயணித்த மற்றொருவரை காணவில்லை என சாரதியின் வாக்குமூலத்தை அடிப்படையாகக்கொண்டு தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

திகதி 20.01.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4653
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,754,670.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 9 5 2 3 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,936,979.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2948
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,254,840.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 17 28 66 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,601,156.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1001 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,961,520.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 173,062,382.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 02 வெற்றி இலக்கங்கள் 05 09 42 55
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 03054

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 683
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,742,980.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 06 45 78 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,316,102.80

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 345
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,182,700.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 31 32 70 89
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,200,340.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1673
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,638,140.00
சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 01 13 21 48

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு 5000 ரூபா ஊதியம் கிடைக்கவில்லை

## கொடுப்பனவையும் இணைத்து வழங்குவதற்கு போதுமானளவு நிதி கிடைக்கவில்லையென கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கு திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.


அரசாங்க ஊழியர்களுக்காக அரசாங்கம் அறிவித்த 5000 ரூபா கொடுப்பனவும் ஆசிரியர்களின் சம்பளத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கிழக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்களுக்கான 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என சம்பந்தப்பட்ட வலயக்கல்வி பணிமனைகளுக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்திருந்தது.

இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் வினவியபோது, திருத்தப்பட்ட சம்பளத்துடன் 5000 ரூபா கொடுப்பனவையும் இணைத்து வழங்குவதற்கு போதுமானளவு நிதி கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நிதி கிடைத்தவுடன் 5000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

# சாணக்கியனுக்கு கொரோனா தொற்று



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது. இரா.சாணக்கியனுக்கு கொரோனா தொற்றுக்கான அறிகுறி தென்பட்ட நிலையில், அவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் (20) அவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தனது ட்விட்டர் பதிவில் இரா.சாணக்கியன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், தம்மை தனிமைப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், கடந்த சில நாட்களாக தம்முடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால், பரிசோதனை மேற்கொள்ளுமாறும் இரா.சாணக்கியன் கோரியுள்ளார்.

# பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு பாராட்டு

## பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரியில் ஏற்பாடு




பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூயிலிருந்து (தேசிய பாடசாலை) 2020 க.பொ.த. (உயர் தரத்தில்) சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டும் வைபவம் பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அரங்கத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் கலந்துகொண்டார். உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், பொத்துவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.புகாரி, முறைசாரா கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.ஹனீபா இஸ்மாயில், பொத்துவில் கவிவாணர் எம்.ஏ.அஸீஸ் வித்தியாலய அதிபர் எம்.ரஹீம், ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.முபாறக் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இவ்வைபவம் பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர் எச்.ஆர்.எம்.கலீலின் தலைமையில் இடம்பெற்றது.

பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரியிலிருந்து (தேசிய பாடசாலை) க.பொ.த (உயர் தரத்தில்) சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டி கௌரவித்ததன் பின்னர், உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்,

“இந்தப் பாடசாலையில் எனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தேன். எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணத்தின் வருவிளைவான மனச்சித்திரத்தை எனக்குள் கொண்டு என் வாழ்வில் களமாடலைத் தொடங்கினேன். எனது ஊடகப் பயணத்திற்கு அச்சாணியாய் அமைந்த அறிவும் தமிழும் இந்தப் பாடசாலை எனக்குத் தந்தது. அதிலும் குறிப்பாக, எனக்கு தமிழ் கற்றுத் தந்த ஆசான் மர்ஹூம் ஹிலூர் ஆசிரியரை இவ்விடத்தில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரியிலிருந்து (தேசிய பாடசாலை) 2002 க.பொ.த. (உயர் தரத்தில்) சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டும் வைபவம், பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அரங்கத்தில் இடம்பெற்று சாதனை படைத்துள்ளது.

புதிய உத்வேகத்துடன் மாணவர்கள் மனவெழுச்சிகொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். மாணவர்கள் பெற்றோர்களை மதிப்பதுபோல், ஆசிரியப் பெருந்தகைகளையும் மதித்தொழுக வேண்டும்.

எல்லாத்துறைகள் சார்பாகவும் நமது ஊரைப் பற்றிய கனவுகள் எனக்குள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றாக நனவாகும். கனவு காணுங்கள். பாரதி சொன்னதுபோல் பெரிதினும் பெரிது கேளுங்கள்.

பொத்துவில் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் வெளியூர் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. அவர்கள் கல்வியைப் போதிப்பதற்காக செய்கின்ற தியாகம் போற்றுதற்குரியது. அந்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

வெற்றிகளை அடைந்துவிட்டேன் என்பதான மனச்சித்திரத்தை உங்களுக்குள் உருவாக்கி, அவமானங்களை வெகுமானங் களாக மாற்ற மாணவர்கள் திடசங்கற்பம் கொள்ளவேண்டும். எனது வாழ்வின் கொள்கையாக, “சிறப்பாக வாழ்ந்து காட்டுவதே மிகச் சிறந்த பதிலடி” என்பதைக் கொண்டுள்ளேன்” - என்றார்.

மேலும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், “இந்தப் பாடசாலையின் அபிவிருத்திசார் விடயங்களில் உதவுவதற்கு எப்போதும் காத்திருக்கிறேன். நாடாளுமன்ற உறுப்பினரை பயன்படுத்திக்கொள்வதற்கான ஏதுக்களை பாடசாலை நிர்வாகம் உருவாக்க வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போடியார் புலம்பல்.!



**கொரோனாவுக்கும், இனவாதத்துக்கும், இலங்கையில ஒரு ஒற்றுமை இருக்கு என்ன எண்டு தெரியுமா?**

**எந்த ஊசி போட்டாலும், எந்த நாட்டு வைத்திய ஆலோசனை பெற்றாலும், என்னதான் மருந்து மாத்திரை எடுத்தாலும் இந்த இரண்டும் இஞ்ச இருந்து தொலையவே தொலையாது.!**

# மட்டு. மகாஜனக் கல்லூரியில் 14 மாணவர்களுக்கு கொரோனா

(க-சரவணன்)

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி மாணவர்கள் 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா நோயாளர்கள் 65 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பணிப்பாளர் வைத்தியர் இ.உதயகுமார் தெரிவித்தார்.

குறித்த பாடசாலையில் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 14 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளதையடுத்த ஜனவரி முதலாம் திதி தொடக்கம் கடந்த 19ஆம் திகதிவரையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் வங்கி ஊழியர்கள், மாணவர்கள் 65 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன், இவர்களுடன் நேரடி தொடர்புபட்ட 94 பேரை வீடுகளில் தனிமைப்படுத்தியுள்ளதுடன் இவர்களுக்கு 7 நாட்களின் பின்னர் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



(மூதூர் நிருபர்)

மூதூர் வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட அல்-ஹம்றா மகா வித்தியாலயம், தி/மூ/சாஹிரா மகா வித்தியாலயங்களில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்று வருகின்ற 100 மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு 2,700 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அல்-ஹிக்மா பௌண்டேசன் தொண்டு நிறுவனத்தினால் நேற்று முன்தினம் (20) வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அல்-ஹிக்மா பௌண்டேசன் நிறைவேற்று அதிகாரி அஷ்ஷேஹ் அப்பாஸ் இபாதுல்லாஹ், அந்நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.நிஸ்புல்லா, மூதூர் வலய உதவிக் கல்விப் பணிபாளர் பீ.ஹாஜா முஹைதீன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட இந்நிறுவனத்தின் ஊழியர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கலை, கலாசார படைப்புகளின் பாதுகாப்பை மேம்படுத்த காத்தான்குடியில் கிராமிய கலை வட்டங்கள் ஸ்தாபிப்பு



கலாசாரம் மற்றும் கலைஞர்களின் கலைப் படைப்புகளின் பாதுகாப்பினை மேம்படுத்து வதற்காக காத்தான்குடியில் கிராமிய கலை வட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதய ஸ்ரீதரின் வழிகாட்டலின்கீழ் பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில் கலை வட்டங்களை ஸ்தாபிக்கும் நிகழ்வு நேற்று (21) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அனைத்து கலாசாரம் மற்றும் கலைஞர்களின் கலைப் படைப்புகளின் பாதுகாப்பினை மேம்படுத்து வதற்கும் கிராம மட்டத்தில் கலைஞர்கள் மற்றும் சமூகத்தை அணிதிரட்டுதல் எனும் குறிக்கோளுடன் தேசிய மரபுரிமை, அரங்கக்கலை மற்றும் கிராமிய கலை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை கலைக்கழகம் ஒன்றிணைந்து கிராமிய கலை வட்டங்களை நிறுவும் வேலைத்திட்டத்தினை நாடுபூராகவும் முன்னெடுத்து வருகின்றது.

கிராமப்புறங்களில் ஒதுங்கியிருக்கும் கலைஞர்களின் உண்மையான திறமைகளுக்கு அரச அனுசரணையினை வழங்கி தரமான கலைகளை வளர்ப்பதன் மூலம் உண்மையான கலாசாரத்தினையும், ஒழுக்கமான சமூகத்தினையும் உருவாக்கமுடியும் என நம்பப்படுகின்றது.

இதனடிப்படையில் காத்தான்குடி பிரதேசத்தி லுள்ள கலை, இலக்கிய கழகம், இஸ்லாமிய இலக்கிய கழகம் மற்றும் சிறுவர் இல்ல கோலாட்டக் கழகம் என்பன கிராமிய கலை வட்டங்களாக நிறுவப்பட்டன.

இதனூடாக நாட்டார்புற கலை, கவிதை, நடனங்கள், இசை, கலை, நாடகங்கள், தற்காப்புக் கலை, கட்டிடக் கலை, சுதேச மருத்துவம், கைவினை, சிற்பங்கள் உள்ளிட்ட 23 கலை அம்சங்களை பாதுகாக்க இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் சிந்து உசா, கலைஞர்கள், இலக்கியவாதிகள், கலைக் கழகங்களின் உறுப்பினர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# பொருளாதாரக் கொள்கையின் முறையற்ற தன்மையினால் அத்தியாவசியப் பொருட்களை வாங்க டொலர் தேடி அலைகிறோம்

## ஏ.எல்.எம்.அதாஉல்லா எம்.பி.



(மாளிகைக்காடு நிருபர்)

கொரோனா இந்த நாட்டினது மட்டுமின்றி உலகினது போக்கிலும் மாற்றத்தை உண்டாக்கி மனித மனங்களிலும் பாரிய மாற்றத்தை உண்டாக்கியுள்ளது. அதனால் வறுமைக்கோட்டுக்குகீழ் இலங்கையர்கள் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கான காரணம் வெறுமனே கொரோனாவின் தாக்கம் மட்டுமல்ல. பொருளாதாரக் கொள்கையின் முறையற்ற தன்மையினால் நாம் இன்று அரிசி, பால்மா, சிறுபிள்ளைகளின் உணவுகள், எண்ணெய், பழ வகைகள் என தேவையான பொருட்களை வாங்க டொலர் தேடி அலைகிறோம் - என தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

பாலமுனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நமது முன்னோர்கள் டொலர் தேடி எங்கும் அலையவில்லை. எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளுக்கு மக்களை விழிப்பூட்டும் இந்த விடயம் சவாலாக முன்வைக்கப்படுகிறது. உலகச் சந்தையில் பெறுமானம் கூடிய மாணிக்கக் கல் எமது நாட்டில் இருக்கிறது. பருவ மழைகள் சிறப்பாக பொழிகின்றன. ஆதம் மலையைக்கொண்ட இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட அழகான நாடு. இவற்றையெல்லாம் முறையாக பயன்படுத்த தெரியாதவர்களாக .நாம் இருக்கிறோம். பழைய அரசர்கள் கட்டிய குளங்களின் பின்னர் புதிய குளங்கள் அமைக்கப்படவில்லை. களப்பு நிறைந்து நீர் கடலுடன் வீணாகச் சென்று சேர்கிறது. வெளிநாடுகளில் பணத்தை செலவழித்து நீரை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நீரைப்பற்றி சிந்திப்பதே இல்லை. எமக்கிருக்கின்ற வளமான நிலம் போன்று வேறெங்கும் இல்லை. நாம் சோம்பறிகள்போன்று வாழும் பொருளாதாரக் கொள்கைகளே நம்மீது திணிக்கப்பட்டுள்ளன.

நமது உற்பத்திகளை பொருளாதாரமாக மாற்றகூடாது என்பதற்காக திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட அநீதிகளின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட பிரதியீட்டு பொருட்களையே நாம் அன்றாடம் பாவிக்கிறோம். இலங்கையின் பழவகைகளுக்கு உலக சந்தையில் உயர்ந்த பெறுமானம் இருக்கிறது. பாலுற்பத்தியில் தன்னிறைவடைந்து தயிரை உருவாக்கியவர்கள் நாங்கள். அன்று வயல் செய்வது வயிற்றுக்காக என்றவர்கள் இன்று வியாபாரமாகி பரிதவிக்கும் நிலையில் உள்ளார்கள். மீண்டும் பழைய நிலைகளை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்லாம் ஹராமாக்கிய பதுக்கல் வெளிப்படையாக நடைபெறுகிறது. விலையேறும்வரை தானியங்கள் பதுக்கப்படுகின்றன. அதற்காக எமது வாழ்வினை நாம் ஏமாற்றத்தில் கொண்டுசெல்ல முடியாதது. இன்று எண்ணெய் இல்லையென்றால் மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை, டொலர் இல்லை எனும் நிலை தோன்றியுள்ளது. இதனையே நான் பல தசாப்தங்களாக பேசி வந்துள்ளேன்.

பயங்கரவாதம், யுத்தம், இயற்கை அனர்த்தங்களின் பல்வேறு புரட்ச்சி கவிதைகளை நாம் எழுதியிருக்கிறோம். கவிதைகளினூடாக அந்த காலத்தின் நிலைகளை அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அதுபோன்றுதான் கொரோனா காலத்திலும் நிறைய கவிதைகளை நாம் எழுதியிருப்போம். அந்த காலங்களில் உளவியல் ரீதியாக பாரிய துன்பங்களை சந்தித்திருந்ததுடன் நிறைய பிரார்த்தனைகளை செய்தோம். ஜனாஸாக்கள் எரிந்ததை கண்டு வேதனையுடன் நாம் வாழ்ந்த காலங்களில் அதனை ஒட்டியதாக கவிதைகள் வடிக்கப்பட்டிருந்தால் அதில் உயிரோட்டம் இருந்திருக்கும்.

அந்த காலங்களில் எழுத்தாளர்கள் உருகி உருகி எழுதினார்கள், உலமாக்கள் நள்ளிரவிலும் தொழுது அழுது பிராத்தித்தார்கள், அரசியல்வாதிகள் தம்மால் முடிந்த உயர்ந்த பங்களிப்பை மேற்கொண்டார்கள். கவிஞர்களும், இலக்கியவாதிகளும் தமது இலக்கியங்களில் பிராத்தித்தார்கள். இறைவனின் நாட்டத்தினால் நாம் அதிலிருந்து மீண்டுவந்தோம். இருந்தாலும் அது இன்னும் முற்றுப்பெறவில்லை. இன்னும் பல ஆண்டுகளுக்கு பின்னர் எலிக்காய்ச்சல் போன்றோ அல்லது கரப்பான் காய்ச்சல் என்ற பெயரிலையோ ஒன்று வந்தால் அன்று அதிகாரத்திலிருக்கும் அமைச்சர் தனது மூப்பில் ஒரு வர்த்தமானியை வெளியிட்டால் அதனில் உண்டாகும் நிலையை எண்ணியவர்களாக அதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்ற மனோநிலையில் வாழ்கின்ற காலத்தில் மூத்த இலக்கியவாதிக்கு பாராட்டு நடக்கிறது பாலமுனை பாரூக்கும் இந்த நாடு சந்தித்த முக்கிய அத்தனை அசாதாரண நிலைகளிலும் வாழ்ந்திருக்கிறார். அந்த நிலைகளின் கண்ணாடியாக அவரது எழுத்துக்களை வெளிக்காட்டியும் இருக்கிறார்- என்றார்.

# ஒரு இலட்சம் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்






ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உதித்த சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக ஒரு இலட்சம் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை (19) மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

வரவு-செலவு முன்மொழிவுகளின்போது விசேட முன்னுரிமைகளை வழங்கி பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகத்தின்கீழ் செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ள கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு இலட்சம் திட்டங்களை ஒரே தடவையில் ஆரம்பிக்கும் நிகழ்வு, இவ்வாண்டு பெப்ரவரி 03 (வியாழக்கிழமை) மு.ப. 8.52இற்குள்ள சுபவேளையில் கிழக்குத் திசை நோக்கி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இக்கூட்டத்தின்போது அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கருத்துத் தெரிவிக்கையில், கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து குறைந்தது ஐந்து திட்டங்கள் வரை தெரிவுசெய்து எதிர்வரும் பெப்ரவரி 03ஆம் திகதி நடைமுறைப்படுத்தவேண்டும் என ஆலோசனை வழங்கினார். இத்திட்டத்தினூடாக கிராமிய அபிவிருத்தி, வாழ்வாதாரம், சமூக நலம், தொழில் முயற்ச்சியாளர் ஊக்குவிப்பு போன்ற பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப் பிரிவு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி மற்றும் மாவட்ட பொறியியலாளர் ரீரீ.சுமன், பிரதேச செயலாளர்கள், பிரதி மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கிவைப்பு



(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் 75ஆவது வருட நிறைவையொட்டி இப்பாடசாலையில் கல்வி பயின்றுவரும் தெரிவுசெய்யப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 85 மாணவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இப்பாடசாலையின் பழைய மாணவரும், பிரபல சமூகசேவையாளருமான பொறியியலாளர் ஜஃபர் முகம்மட் இஸ்மாயிலின் சொந்த நிதி மூலம் கொள்வனவுசெய்யப்பட்டு இவ்வுலருணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் (20) வழங்கப்பட்டன.


அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின்போது ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம், பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் பொறியியலாளர் என்.ரி.எம்.சிறாஜுதீன், கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.எல்.அஷ்ஃப், ஓய்வுநிலை உதவி அதிபர் ஏ.எல்.சுஹைப், பொறியியலாளர் எம்.எல்.றமீஸ், உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பளீல் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் இதன்போது கலந்து கொண்டு இவ்வுலருணவுப் பொதிகளை மாணவர்களுக்கு வழங்கினர்.

இதன்போது நாட்டில் சமாதானம், மக்கள் மத்தியில் ஒற்றுமை மற்றும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் விருத்தி ஏற்படவேண்டுமென விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றதுடன், மார்க்கச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

அத்துடன், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமிர்தீன் எழுதிய மீன்பிடி முறைகள்

### கல்முனை கடற்றொழில் மாவட்டம் நூல் வெளியீடு




தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி றபீக்கா அமீர்தீன் எழுதிய "மீன்பிடி முறைகள் - கல்முனை கடற்றொழில் மாவட்டம்" எனும் நூல் 19.01.2022 அன்று ஆசிரியர் சஃபற் தலைமையில் ஒலுவில் Green Villa கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் சூசை ஆனந்தனும் முதன்மை விருந்தினராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.ஏ.எம்.நுபைலும் கலந்து சிறப்பித்தனர். மேலும், இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர்,



விரிவுரையாளர் எம்.எச்.எம்.றினோஸ் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லாஹ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர்.

இந்நூலுக்கான நயவுரையினை கவிஞரும் விரிவுரையாளருமான எஸ்.டி.ஜலால்டீன் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நூல் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் மற்றும் துறைசார்ந்த ஆய்வாளர்கள் போன்றோருக்கு சிறந்த உசாத்துணையாக அமையும் என விருந்தினர்களால் கருத்துரைக்கப்பட்டது.

## இன, மத வேறுபாடுகளுக்கப்பால் வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்வதில் அக்கறை காட்டியவர் வைத்தியர் சுகுணன்

### சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்



(நூருல் ஹுதா உமர்)

வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளாராக பணியாற்றிய காலத்தில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு செய்த பல்வேறு அபிவிருத்திகள் காரணமாக அவர் இவ்வைத்தியசாலை வரலாற்றில் பேசப்படவேண்டிய முக்கிய கதாபாத்திரம் என வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் வெளியிட்டுள்ள பாராட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில், சுகுணன் இப்பிராந்தியத்தில் பணியாற்றிய காலத்தில் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் இங்குள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதில் அதிகளவு அக்கறை காட்டியவர். இவரது காலப்பகுதியில் சாய்ந்தமருது வைத்தியசாலை குறிப்பிடத்தக்க பல்வேறு அடைவுகளை எட்டியுள்ளது.

பிரதேச வைத்தியசாலை தரம் பீ ஆக இயங்கிய வைத்தியசாலையை தரமுயர்த்தித் தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்கள் இணைந்து முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்விடம் கோரிக்கை முன்வைத்தது. இக்கோரிக்கைக்கமைய, ஆளுநரின் பணிப்புரையின் பிரகாரம் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அலாவுதீன் தரம் ஏ ஆக தரமுயர்த்தும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவரது பதவிக்காலத்தின் பின்னர், இதற்குத் தேவையான ஆளணி மற்றும் வைத்திய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதில் சுகுணனின் பங்களிப்பு அளப்பரியது. குறிப்பாக, தற்போதைய அரசால் நியமனம் செய்யப்பட்ட பலநோக்கு அபிவிருத்தி செயலணி ஊழியர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்களை இவ்வைத்தியசாலைக்கு பெற்றுக்கொடுத்து இங்கு தேவையாக இருந்த சுகாதார உதவியாளர்ளுக்கான தேவையைப் பூர்த்திசெய்தவர் சுகுணன்.

கடந்த காலங்களில் இங்கு காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாக சிறிதுகாலம் இவ்வைத்தியசாலையை மக்கள் பயன்படுத்துவதில் மந்தநிலை காணப்பட்டது. வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் பிராந்திய பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய பல்வேறு வளங்கள் வழங்கப்பட்டன. அபிவிருத்தி விடயமாக இவரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஆராய்ந்து பல உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் மட்டும் நின்றுவிடாது தனது பதவிக்காலத்தில் இவ்வைத்தியசாலையை பல்வேறு விடயங்களில் மேம்படுத்துவேன் என்ற உறுதிமொழியை வழங்கி அதனை செயலில் நிரூபித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக அண்மைக் காலமாக இவ்வைத்தியசாலை பல்வேறு சிறப்பான சேவைகளை வழங்கி வருகின்றது.

மேலும், அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறை மேம்படுத்தல் திட்டத்தின்கீழ் (PSSP) சாய்ந்தமருது வைத்தியசாலையையும் உள்வாங்கி அதற்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கியதன் ஊடாக இப்பிரதேச மக்கள் பல்வேறு நன்மைகளை அடைவதற்கான வாய்ப்பை பிராந்திய பணிப்பாளர் ஏற்படுத்தியுள்ளார்கள். சுமார் 30 நிமிடங்களில் பல பரிசோதனைகளைச் செய்யக்கூடிய உபகரணம் இரண்டை மேற்படி திட்டத்தின்கீழ் வழங்கியதன் ஊடாக கடந்த காலங்ளில் இவ்வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் செய்யமுடியாதிருந்த பல பரிசோதனைகளைச் செய்யும் சந்தர்ப்பம் இவரால் கிடைக்கப்பெற்றுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், அணி முகாமைத்துவம் மற்றும் நோயாளர்களை மையமாகக்கொண்ட சேவை வழங்கல் ஆகியவற்றில் திறன்களுடன் முதனிலை சுகாதார கவனிப்பை வழங்கள், வினைத்திறன் மிக்க வகையில் தொற்றா நோய்கள் அதிகரிப்பதை கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமைப்படுத்துதல், தொற்றாநோய்கள் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பொதுமக்களை அடிப்படையாகக்கொண்ட தகவல் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபித்தல் போன்ற சேவைகளை இதனூடாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

அத்துடன், கொரோனா தொற்று தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் பிராந்திய பணிப்பாளராக அவர் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் ஏனைய பிரதேசங்களைவிட ஒப்பீட்டளவில் கல்முனைப் பிராந்தியம் குறைவான பாதிப்புகளை சந்திக்க நேர்ந்தமை அவரது சிறப்பான நிர்வாகத்தை வெளிப்படுத்தியிருந்தது.

தனது பதவிக்காலத்தில் சாய்ந்தமருது வைத்திய சாலையை மட்டுமல்லாது, இப்பிராந்தியத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளையும் மேம்படுத்திய வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் சேவையால் கல்முனை பிராந்தியம் பயனடைந்ததுபோன்று மட்டக்களப்பு பிராந்தியமும் சுகாதாரத்துறையில் உயர்வு பெறுவதற்கான சமிக்ஞையை அவரது நியமனம் வெளிப்படுத்துகின்றது என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## ஜனாதிபதி கூறும் சுபீட்சம் மக்களுக்கானதல்ல; மாறாக அது ராஜபக்ஷ சகோதரர்களுக்கானது

### இம்ரான் எம்.பி. சாடல்



(கிண்ணியா நிருபர்)

ஜனாதிபதியின் உரை யானை விழுங்கிய விளாம்பழம் போன்றது என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை நிறுத்திவைத்த ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையில் ஏன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதை தெளிவுபடுத்துவாரென எதிர்பார்த்தால் அவர் தனது பழைய கதைகளையே மீண்டும் கூறிச்சென்றார்.

அவரின் உரை யானை விழுங்கிய விளாம்பழம் போன்றே இருந்தது. அதில் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை. எரிவாயு வரிசை நீண்டுகொண்டே போகிறது. பால் மா வரிசை நகராமல் நிற்கிறது. சீமெந்தின் விலை ஆகாயத்தை தொடுகிறது. அரிசி இப்போது இருநூறு ரூபா. இன்னும் சில மாதங்களில் 500ஐ தாண்டும் என கணிக்கப்படுகிறது. மரக்கறிகள், மருந்துப்பொருட்கள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு, விலை உயர்வு, ஏன் பலாக்காய்க்கு கூட சிறந்த விலையை இந்த அரசாங்கமே பெற்றுக்கொடுத்துள்ளது. தொடர்ச்சியான மின்சாரத் துண்டிப்பு. இன்னும் சில நாட்களில் கையிருப்பிலுள்ள எரிபொருளும் தீர்ந்துவிட்டால் எரிபொருள் வரிசை ஒன்றையும் எதிர்பார்க்கலாம்.

இப்படி நாடே அதலபாதாளத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது ஜனாதிபதி சுபீட்சத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். ஜனாதிபதி கூறும் சுபீட்சம் மக்களுக்கானதல்ல; அது ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் அவர்களை சுற்றியுள்ள ராஜ தோழர்களுக்குமான சுபீட்சம். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் எதிர்க்கட்சியான நாம் சுட்டிக்காட்டினால் ஜனாதிபதி கோபம் கொள்கிறார். அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் அவரின் ஆட்சியிலேயே நெல்லை 90இற்கு மேல் வாங்கியதாக கூறினார்.

முப்பதாயிரம் ரூபாவுக்கு யூரியா வாங்கி விவசாயம் செய்ததை அவர் மறந்துவிட்டார். 90இற்கு நெல்லை விற்ற விவசாயி யாரும் அந்தப் பணத்தில் மாடி கட்டவில்லை. நெல்லை விற்றதும் அவனும் எரிவாயு, பால்மா வரிசையிலேயே நிற்கிறான். இதுதான் இப்போது எமது நாட்டு மக்களின் நிலை. இதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். தமது இயலாமையை மறைக்க பலவீனமானவரே குறைகளை சுட்டிக்காட்டுபவர்களிடம் கோபம் கொள்வார்கள்.

ஜனாதிபதியால் இந்த இரண்டரை வருடங்களாக முடியவில்லை. அவரின் செயற்பாடுகளை பார்த்தால் எஞ்சிய இரண்டரை வருடத்துக்கும் அவரால் முடியாது. அவர் மொத்தமாக பெயில் (Fail) என தெரிவித்தார்.

## தென்கிழக்குப் பல்கலையில் "உயிர் மூலக்கூறு மாற்றியமைக்கப்பட்ட அங்கிகள் - உயிர் பாதுகாப்பு" தொடர்பான பயிற்சிப்பட்டறை

(ஒலுவில் நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தினது உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, சுற்றாடல் அமைச்சு ஆகியவைகளின் அனுசரணையுடன் "உயிர் மூலக்கூறு மாற்றியமைக்கப்பட்ட அங்கிகள் மற்றும் உயிர் பாதுகாப்பு" தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25, 26ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை தொழில்நுட்பவியல் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவின் துறைத்தலைவர் கலாநிதி ஏ.என்.எம்.முபாறக் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையானது 25ஆம் திகதியன்று அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விஞ்ஞானத்துறை மற்றும் விஞ்ஞானத்துறையற்ற ஆசிரியர்களுக்கும் 26ஆம் திகதியன்று பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்குமாக நடைபெறவுள்ளதாக துறைத் தலைவர் கலாநிதி முபாறக் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் பிரதம அதிதியாகவும், தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் சமூகங்களை தொடர்புபடுத்தும் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸின் வேலைத்திட்டத்தின் கீழ் துறைசார்ந்த இவ்வாறான பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள், தொழில்நுட்பவியல் பீடத்தினது உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவினால் நடத்தப்பட்டு வருவதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.





*கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அதிபர் இ.ரகுபதியின் வழிப்படுத்தலில் காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஸீர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்றபோது...* (படங்கள் - காரைதீவு நிருபர்)

# வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி, முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தி ஒத்துழைப்பு வழங்க கொரியா தயாராகவுள்ளது

## ஜனாதிபதியிடம் அந்நாட்டு சபாநாயகர் இணக்கம்

வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு தென்கொரிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்று, அந்நாட்டு தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் – சியோக் தெரிவித்துள்ளார்.

பார்க் பியோங்-சியோக் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பார்க் பியோங்-சியோக், கொரிய குடியரசின் 21ஆவது தேசிய சபையின் சபாநாயகர் ஆவார். ஆசியாவின் கேந்திர நிலையமான இலங்கைக்கு, ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள கொரிய முன்னணி நிறுவனங்களை ஊக்குவிக்குமாறு பார்க் பியோங்-சியோக்கிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏறக்குறைய 22ஆயிரம் இலங்கையர்கள் தென்கொரியாவில் தொழில் புரிவதுடன், அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் உயர் தொழில்





பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். இலங்கைத் தொழிலாளர்களுக்கு தொழில் சந்தையில் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பியோங்- சியோக், ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொழில் பயிற்சிகளை மேம்படுத்துவதற்கும் கொரிய அரசாங்கத்தின் உதவிகளை வழங்குவதற்கும் தென் கொரிய சபாநாயகர் உடன்பட்டதுடன், இந்நாட்டின் தேவைகளுக்கேற்ப அவற்றை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய சபை உறுப்பினர் ஜூங்க் பில்மோ (JUNG Pilmo), இலங்கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் ஜோன்க் வூன்ஜின்க் ( JEONG Woonjin), வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# இலங்கையில் கண் பார்வை பிரச்சினை வெகுவாக அதிகரிப்பு

## வைத்திய நிபுணர்கள் தெரிவிப்பு




ஆசிய நாடுகளில் கண் பார்வை தொடர்பான பிரச்சினை அதிகமாக இலங்கையிலேயே காணப்படுவதாக கண்வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தியாவில் 0.4 வீதமாகவும் நேபாளத்தில் 0.34 வீதமாகவும் கண் பார்வை தொடர்பான பிரச்சினை காணப்படும் நிலையில், இலங்கையில் 1.1 வீதமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலும் நாட்டின் சுகாதாரத்துறை கட்டமைப்பு சிறந்த முறையில் காணப்படுகின்றபோதிலும், பார்வை தொடர்பான பிரச்சினையில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் நாடு காணப்படுகின்றமை மிகவும் கவலையளிப்பதாக கண்நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நரேஷ் பிரதான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கண்நோய் தொடர்பான விசேட நிபுணர் நரேஷ் பிரதான் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதுடன், பார்வை தொடர்பான சிக்கல்கள் குறித்து அறிந்துகொள்வது இன்றியமையாத விடயம்.

சிறார்கள் உள்ளிட்ட பொதுமக்களின் பார்வை தொடர்பான சிக்கல்கள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்க Ceylon Eye Care Optometric Association தயாராகவுள்ளது. சர்வதேச ரீதியில் செயற்படும் தமது நிறுவனம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் இணையதள பாவனை அதிகரித்துள்ளதால் சிறார்களுக்கு பார்வை பிரச்சினை வெகுவாக அதிகரித்துள்ளது. பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளதால், மாணவர்களுக்கு பார்வை தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறு வயதில் பார்வை குறைபாடுகள் மற்றும் கண்சார்ந்த ஏனைய குறைபாடுகள் குறித்து ஆராய்ந்து உரிய சிகிச்சை பெற வேண்டும். இவ்விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கண்நோய் தொடர்பான விசேட நிபுணர்களுக்கான பற்றாக்குறை, பொருளாதார சிக்கல், கண்நோய்க்கான சிகிச்சை நிலையங்களுக்கான பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கண்நோய் தொடர்பில் பொதுமக்களின் ஈடுபாடு குறைவாக காணப்படுகிறது. இந்நிலையில், கண்நோய் தொடர்பான சர்வதேச நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் மாபெரும் தெளிவூட்டலை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதத்துக்கு அரச - அரசாங்கத்துறை விருது



சிறந்த 50 தொழில்முறை மற்றும் தொழில்சார் பெண்களுக்கான விருது வழங்கும் விழாவில் அரச மற்றும் அரசாங்கத்துறை விருதை தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அண்மையில் கொழும்பிலுள்ள ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவின் சிறந்த 50 தொழில்முறை மற்றும் தொழில்சார் பெண்களுக்கான விருது வழங்கும் விழாவின் 11ஆவது பதிப்பில் தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதம் 2021ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரசாங்கத்துறை விருதை பெற்றுக்கொண்டார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளின் முன்னிலையில் திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் கலாநிதி சீதா அரம்பேபொலவினால் இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

விருது வழங்கும் விழாவின்போது, இலங்கை மற்றும் மாலைதீவைச் சேர்ந்த 50 சிறந்த தொழில்முறை மற்றும் தொழில்சார் பெண்கள் அந்தந்தத் துறைகளிலான தமது தொழில்முறை மற்றும் தொழில்சார் சாதனைகளுக்காக விருதுகளைப் பெற்றனர்.

இலங்கை இராஜதந்திரியாகவும் சர்வதேச அரச உத்தியோகத்தராகவும் 33 வருடகால சேவையை மேற்கொண்டு குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்தமைக்காக வெளிநாட்டு அமைச்சின் தூதுவர் ஆசிர்வாதத்துக்கு கௌரவமான அரச மற்றும் அரசாங்கத் துறை விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முந்தல் பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்தில் பொங்கல் விழா நேற்று (21) காலை நடைபெற்றது.

முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் ஐ.பி.தேசானி ஹசந்திகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மில், நிர்வாக உத்தியோகத்தர் டபிள்யூ. ஏ.சுசீலாவதி உட்பட பிரதேச செயலக சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, பிரதேச செயலக பிரதான அலுவலக கட்டடத்தில் பொங்கல் பொங்கப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அக்குறணை பாலர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு







(இக்பால் அலி)

அக்குறணை பிரதேசத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

தீகலை பிரதேசத்தில் அமைந்துள்ள அக்குறணை பிரதேச சபைக்கு உரித்தான பாலர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் ஆரம்ப நிகழ்வு பாலர் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இந்தப் பாலர் பாடசாலைக்கு சகல வசதிகளையும் கொண்ட இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்க பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டு அதன் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையும் பட்சத்தில் கட்டிடம் பாலர் பாடசாலை தேவைகளுக்காக கையளிக்கப்படும்.

மாணவர்கள் தங்களுடைய கல்வி வாழ்க்கையில் முதல் கட்டத்தை ஆரம்பிக்கின்ற இடம் இந்த பாலர் பாடசாலைகள்தான்.

இக்காலத்தில் போடப்படும் அத்திவாரமே மாணவர்களது எதிர்கால கல்வி வாழ்வை தீர்மானிக்கப் போகிறது. குழந்தைகள் பயன்தரும் விதை போன்றவர்கள், அதனை விதைத்து விருட்சமாக மாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகளாகிய எம்மிடமே உள்ளது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறுபட்ட பணிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். எதிர்காலங்களிலும் இன்னும் பல்வேறு வழிகளினூடாக இதனை நாம் மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாநாகலை விகாரையின் நாயக்க தேரர் பரனகம ஞானவிமல, வீடமைப்பு மற்றும் மக்கள் நல அபிவிருத்தி பிரிவின் முக்கியஸ்தர், அக்குறணை பிரதேச சபை உறுப்பினர் சமிந்த திலகரத்ன உட்பட அரச உத்தியோகத்தர்கள், பிரதேசவாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இரண்டு வலம்புரி சங்குகளுடன் மூவர் கைது

மூன்று கோடி ரூபாவுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டுவரப்பட்டிருந்த இரண்டு வலம்புரி சங்குகளுடன் மூவர் மொனராகலை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (20) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, அந்த வலம்புரி சங்குகளை பெற்றுக்கொள்பவர்களினூடாக, இரண்டு சங்குகளையும் மொனராகலை பிரதேசத்துக்கு கொண்டுவருமாறு அதன் உரிமையாளர்களுக்கு அறிவிக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரியொருவர் வலம்புரி சங்குகளை கொள்வனவு செய்வதற்காக மொனராகலை விடுதியொன்றிலிருப்பதாக அறிவித்ததாகவும் பொலிஸ் அதிகாரி கள் குறித்த விடுதியில் அறை யொன்றை பெற்றுக்கொண்டு அங்கு தங்கியிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து குறித்த நபர் இரு வலம்புரி சங்குகளையும் எடுத்துக்கொண்டு அந்த விடுதிக்கு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் சங்குகளை கொள்வனவு செய்வதற்காக பரிசோதனைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளனர்.

தெஹிவளை, சூரியவெவ மற்றும் பன்னிப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 73, 42 மற்றும் 30 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரு வலம்புரி சங்குகளுடன் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சங்குகளை எடுத்து வந்த நபரின் காரும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# இலங்கையின் முதலாவது அரபு மொழிப் பேராசிரியராக கலாநிதி சலீம் நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய நாகரீகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் முதலாவது அரபு மொழிப் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இப்பதவியுயர்வு அரபு மொழியில் இவருக்குள்ள புலமைத்துவத்துக்குக் கிடைத்த கௌரவமாக கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம், மாவடிப்பள்ளி முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதய கமு/ அல் - அஸ்ரப் மகா வித்தியாலயம்) தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்து பின்னர் கல்முனை அல் - ஹாமியா அரபுக் கல்லூரியில் கற்றதன் பின்னர், இந்தியாவின் லக்னோ தாருள் உலூம் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் அரபு மொழி மற்றும் இலக்கிய பீடத்தில் கற்று முதலாம் நிலை அதிவிசேட சித்தியுடன் தனது இஸ்லாமிய கற்கையை நிறைவு செய்தார். 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரும் சீர்திருத்தவாதியுமான அல்லாமா அபுல் ஹஸன் நத்வியின் மாணவராக பேராசிரியர் இருந்துள்ளமை விசேட அம்சமாகும்.

1999ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம், 2002 இல் அரபு மொழியில் விசேட இளங்கலைமானிப் பட்டத்தை பெற்றார். 2004 ஆம் ஆண்டு அரபு மொழியில் முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு, 2012ஆம் ஆண்டு உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான மலேஷியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியியலில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தார்.

பேராசிரியரின் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக்கு விசேட திறமையை வெளிப்படுத்தியதற்கான திறமை விருது பல்கலைக்கழகத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



கொழும்பு பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா கடந்த 19ஆம் திகதி கொழும்பு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது. கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்னவின் பங்களிப்பில் பிரதேச செயலாளர் நாலக ரத்னாயக மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் அருணோத என். போபகமகே ஆகியோரின் அனுசரணையுடன் இந்தப் பொங்கல் விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# உலகெங்கும் சமத்துவம் பரவ - தீண்டாமை ஒழிய பாடுபட்ட இராமானுஜருக்கு ஹைதராபாத்தில் 216 அடி உயர சிலை

## பெப். 5இல் திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி



இந்து மதத் துறவியும் சமூக சீர்திருத்தவாதியுமான இராமானுஜரின் 216 அடி சிலை எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி ஹைதராபாத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

11ஆம் நூற்றாண்டில் தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்த இந்து மதத் துறவி இராமானுஜர். தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இராமானுஜர், உலகமெங்கும் சமத்துவம் பரவ, தீண்டாமை ஒழிய பாடுபட்டார். வைஷ்ணவ குருமார்களில் முக்கியமானவரான இராமானுஜருக்கு 216 அடி உயர சிலை ஹைதராபாத்தின் புறநகர் பகுதியான ஷம்ஷாபாத்தில் 45 ஏக்கர் வளாகத்துக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. சமத்துவத்துக்கான சிலை (Statue of Equality) என வர்ணிக்கப்படும் இதனை பிரதமர் மோடி பெப்ரவரி 5ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளார்.

இந்த சிலை முழுக்க முழுக்க பக்தர்களின் நன்கொடைகளை பெற்று சுமார் ரூ.1,000 கோடி செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இராமானுஜர் இந்த பூமியில் 120 வருடங்கள் வாழ்ந்ததை நினைவுகூரும் வகையில் 120 கிலோ தங்கத்தைக் கொண்டு இந்த சிலையின் கருவறை அமைக்கப்பட்டுள்ளது. கருவறை அமைந்துள்ள உள் அறையை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பெப்ரவரி 13ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளார்.

கருவறை தங்கத்தால் செய்யப்பட்டுள்ள அதேநேரத்தில் 216 அடி கொண்ட வெளிப்புறச் சிலை, உட்கார்ந்த நிலையிலுள்ள உயரமான சிலைகளில் ஒன்றாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை மற்றும் துத்தநாகம் என ஐந்து விதமான உலோகங்களின் கலவையான பஞ்சலோஹா சிலையாக நிறுவப்பட்டுள்ளது. இராமானுஜர் சிற்பம் மெல்கோட் மற்றும் ஸ்ரீரங்கம் கோவில்களில் உள்ள இராமானுஜரின் செதுக்கப்பட்ட கல் உருவங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

உட்கார்ந்த நிலையில் உள்ள உயரமான சிலைகளில் தாய்லாந்தில் அமைந்துள்ள 302 அடி கொண்ட புத்தர் சிலையே உலகின் மிகப்பெரிய சிலையாக இருந்து வருகிறது. இதற்கடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சிலை என்ற பெருமையை இராமானுஜரின் 216 அடி சிலை பெறவுள்ளது.

சிலை அமைக்கப்பட்டுள்ள 45 ஏக்கர் இந்த வளாகத்தில் 108 திவ்ய தேசங்கள், ஆழ்வார்கள், தமிழ் துறவிகளின் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்ணு கோயில்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. மேலும், இதே வளாகத்தில் பத்ரா வேதி என பெயரிடப்பட்ட 54 அடி உயர அடித்தள கட்டிடம், வேதங்களுக்கான டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம், பண்டைய இந்திய நூல்கள் அடங்கிய நூலகம், ஒரு கல்விக் கூடம் ஆகியவற்றுடன் ஒரு தியேட்டர் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இராமானுஜரின் 1,000ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் இந்த சிலை அமைக்கும் பணி கடந்த 2014ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது. பணிகள் முழுவதுமாக முடிந்துள்ள நிலையில் தற்போது பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

திறப்பு விழா அன்று சிலை வளாகத்தில் 1,035 யாகம் உட்பட ஆன்மீக நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

## இந்தியா கேட்டில் நேதாஜிக்கு பிரம்மாண்ட சிலை



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிரம்மாண்ட சிலை இந்தியா கேட்டில் நிறுவப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

கடந்த 1971ஆம் ஆண்டு நடந்த இந்தியா - பாகிஸ்தான் போரில் வீரமரணமடைந்த வீரர்களின் நினைவாக டில்லி இந்தியா கேட் பகுதியில், 1972 ஜனவரி 26 அன்று அமர்ஜவான் ஜோதி அமைக்கப்பட்டு அணையா விளக்கு ஏற்றப்பட்டது. இந்த விளக்கு 50 ஆண்டுகளாக தொடர்ந்து எரிந்து வருகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு டெல்லி இந்தியா கேட் பகுதியில் தேசிய போர் நினைவு சின்னம் அமைக்கப்பட்டது. இங்கு இந்தியா சுதந்திரமடைந்த பிறகு பாகிஸ்தானுடன் நடந்த போர் முதல் தற்போது வரை நடந்த போர்களில் வீர மரணமடைந்த வீரர்களின் நினைவாக இந்த சின்னம் அமைக்கப்பட்டதுடன் அவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் அமர்ஜவான் ஜோதியிலுள்ள அணையா விளக்கு, தேசிய போர் நினைவு சின்னத்தில் அமைக்கப்பட்டுள்ள அணையா விளக்குடன் ஒன்றிணைக்கப்படுகிறது. இரண்டு அணையா விளக்குகளும் ஒன்று சேர்க்கப்படுகிறது என இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாளை ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடும் இவ்வேளையில், கிரானைட் கற்களாலான அவரது பிரமாண்ட சிலை இந்தியா கேட்டில் நிறுவப்படும் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இது அவருக்கு இந்தியா கடமைப்பட்டுள்ள நிலையில் அதன் அடையாளமாக இந்த சிலை இருக்கும்.

நேதாஜியின் பிரமாண்ட சிலை தயாராக உள்ளது. இந்த சிலை இந்தியா கேட்டில் வைக்கப்படும். நேதாஜியின் பிறந்தநாளான ஜனவரி 23ஆம் திகதி சிலையை நான் திறந்து வைப்பேன் -இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சபரிமலை நடை அடைப்பு



மகரஜோதி சீசன் முடிந்து சபரிமலை நடை நேற்றுமுன்தினம் காலை சாத்தப்பட்டது. இதை தொடர்ந்து திருவாபரணங்கள் பந்தளத்துக்கு எடுத்து செல்லப்பட்டன.

கடந்த 14ஆம் திகதி மகர ஜோதி தரிசனத்துக்கு பின்னர் சுவாமி பவனி, சரங்குத்திக்கு எழுந்தருளல், மாளிகைப்புறத்தில் குருதி பூஜை ஆகியவை நடைபெற்றன. நேற்றுமுன்தினம் காலை 5:00 மணிக்கு நடை திறக்கப்பட்டது. சிறிது நேரத்தில் பந்தளம் மன்னர் பிரதிநிதி சங்கர்வர்மா சன்னதி முன்பு வந்தார். அவருக்கு மேல்சாந்தி பரமேஸ்வரன் நம்பூதிரி பிரசாதம் வழங்கினார். பின்னர் திருவாபரண பெட்டிகளுடன் பக்தர்கள் குழுவினர் வந்தனர். அவர்கள் ஐயப்பனை வணங்கி விட்டு பந்தளத்துக்கு புறப்பட்டனர்.

தொடர்ந்து மேல்சாந்தி நடை அடைத்து சாவியுடன் 18ஆம் படிக்கு கீழே வந்தார். அங்கு சங்கர்வர்மாவிடம் கோயில் சாவி மற்றும் பண முடிப்பை வழங்கினார். அதைப் பெற்றுக்கொண்ட அவர், மீண்டும் சாவி மற்றும் பணமுடிப்பை மேல்சாந்தியிடம் கொடுத்து வரும் நாட்களிலும் பூஜைகளை தவறாமல் நடத்தவேண்டும் என்று கூறி விடைபெற்றார். மாசி மாத பூஜைகளுக்காக பெப்ரவரி 12ஆம் திகதி மாலை சபரிமலை நடை திறக்கப்படவுள்ளது.


நேர்மையான

செய்தியாக்கத்தின் புதிய பரிணாமம்

தமிழன் மின்னிதழை பெற்றுக்கொள்ள
நீங்கள் செய்ய வேண்டியது

* epaper.thamilan.lk
* Register செய்யவும்
* உங்களது Email முகவரிக்கு வரும் mail ஐ activate செய்யவும்
* login செய்யவும்
* உங்களுக்கான package ஐ தெரிவு செய்யவும்




இன்றே சந்தாதாரராகுங்கள்

தொழில்நுட்ப உதவிகளுக்கு
+94 762576715

காணொளியாக பார்க்க QR Code ஐ scan செய்யவும்

தமிழன் | தமிழன் | ஜீனியர் | தமிழ் முரசு

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

# உலக செய்திகள்

## தொடரும் பதற்றம்:
## உக்ரைன் எல்லையில் படைகளைக் குவிக்கும் ரஷ்யா



# ஐரோப்பாவில் மீண்டும் பனிப்போர் மூளும் அபாயம்

### எச்சரிக்கிறார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன்

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா நடந்துகொள்வதை தொடர்ந்து அனுமதித்தால் இந்தப் பிராந்தியத்தில் முழு போர் வெடிக்கும் அபாயத்தை மறுப்பதற்கில்லை - என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் எல்லைப் பகுதியில் தங்களது நாட்டு துருப்புகளை ரஷ்யா குவித்து வருவதால் பதற்றம் நிலவுகிறது.

கடந்த சில மாதங்களாக உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையே மோதல் வலுத்து வருகிறது.

இந்நிலையில், சுமார் ஒரு இலட்சம் படைவீரர்களை உக்ரைன் எல்லையில் ரஷ்யா நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே போர்ச்சூழல் உருவாகியுள்ளது.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் கடுமையாக கண்டித்துள்ளன.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறும்போது,

''ரஷ்யா, உக்ரைனை ஆக்கிரமிக்கப் பார்க்கிறது. ரஷ்யா ஏதோ செய்யவிருக்கிறது" என்று தெரிவித்தார்.

பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் ட்ருஸ் தெரிவிக்கையில், "சீனாவும், ரஷ்யாவும் சர்வாதிகாரத்தை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்ய நினைக்கின்றன. பெரிய தவறு செய்வதற்கு முன்னர் உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகள் நிச்சயம் வெளியேற வேண்டும். ரஷ்யா தனது வரலாற்றிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை. ஆக்கிரமிப்பு ஒரு பயங்கரமான புதைகுழி. அது உயிரிழப்புக்கு வழிவகுக்கும்" என்று அவர் எச்சரித்திருக்கிறார்.

**மீண்டும் பனிப்போர் மூளும் அபாயம்**

ஐரோப்பாவில் பனிப்போர் காலத்திய ஆபத்துகளை ரஷ்யா மீண்டும் ஏற்படுத்துவதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

உக்ரைன் விவகாரம் குறித்து அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் வியாழக்கிழமை கூடி ஆலோசனை நடத்தினர்.

இதன்போது உக்ரைனின் இறையாண்மையைக் குலைப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகளிடையே ரஷ்யா பிரிவினையை ஏற்படுத்துவதாக ஆன்டனி பிளிங்கன் குற்றஞ்சாட்டினார்.

சுயமாக முடிவெடுப்பதற்கான உக்ரைனின் உரிமையை ரஷ்யா மறுப்பதால், பனிப்போர் காலத்திய அபாயகரமான சூழலை ரஷ்யா ஏற்படுத்தி வருவதாக அவர் எச்சரித்தார்.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா நடந்துகொள்வதை தொடர்ந்து அனுமதித்தால், இந்தப் பிராந்தியத்தில் முழு போர் வெடிக்கும் அபாயத்தை மறுப்பதற்கில்லை என்று தனது உரையில் பிளிங்கன் எச்சரித்தார்.

உக்ரைன் மீது படையெடுத்து ரஷ்யா ஆக்கிரமித்தால், மிகக் கடுமையான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய நாடுகள் தயங்காது என்று இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற நாடுகள் எச்சரிக்கை விடுத்தன.

இத்தகைய அறிவிப்புகள், தங்களுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் இடையிலான



விரிசலை மேலும் அதிகரிக்கும் என்று ரஷ்யா சாடியுள்ளது என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாப்பதற்காக கடந்த 1949ஆம் ஆண்டில் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது.

சோவியத் ஒன்றியம் கடந்த 1991ஆம் ஆண்டில் சிதறியபோது, அதில் அங்கமாக இருந்த உக்ரைன், சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. எனினும், தனது எல்லையையொட்டி அமைந்துள்ள அந்த நாடு நேட்டோவில் இணைந்தால் தங்களது தேசிய பாதுகாப்புக்கு அது மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா கருதுகிறது. உக்ரைனை தங்களது அமைப்பில் இணைக்கமாட்டோம் என்று நேட்டோ உறுதிமொழி அளிக்கவேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்தி வருகிறது. எனினும், இதற்கு நேட்டோ அமைப்பு உடன்படாதால் இரு தரப்பிலும் பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்துள்ளது. உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டை தன்னுடன் இணைத்துக்கொள்வதற்காக ரஷ்யா படை குவிப்பில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கும் ரஷ்யா, உக்ரைன்தான் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லை அருகே படைகளைக் குவித்து வருவதாகவும் அதற்குப் பதிலடியாகவே தாங்கள் படைக்குவிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துவருகிறது.

இந்நிலையில், நேட்டோ கூட்டணியை உக்ரைனுக்கு விரிவுபடுத்துவதற்கு தடை விதிப்பதைத் தவிர, வேறு எந்தத் தீர்வையும் ஏற்கப்போவதில்லை என்று அந்த நாடு தற்போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

## கானாவில் பாரிய வெடி விபத்து

### 17 பேர் பலி; 60 பேர் படுகாயம்



கானாவின் அபியேட் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஏராளமான கட்டடங்கள் தகர்ந்து வீழ்ந்துள்ளன. இந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அபியேட் பகுதியிலுள்ள தங்கச்சுரங்கத்தில் வெடிபொருட்களை ஏற்றிச்சென்ற லொறியொன்று இருசக்கர வாகனத்துடன் மோதியுள்ளது. இதில் லொறியிலிருந்த வெடிபொருட்கள் வெடித்துச் சிதறி பயங்கர வெடி விபத்து நேரிட்டதன் காரணமாக அக்கம்பக்கத்திலிருந்த உறுதியில்லாத நூற்றுக்கணக்கான வீடுகள் தகர்ந்து வீழ்ந்துள்ளன.

## லைபீரியாவில் கூட்ட நெரிசல்: 29 பேர் பலி; பலர் படுகாயம்



லைபீரிய தேவாலயமொன்றில் இடம்பெற்ற செப கூட்டத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 29 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த துயரச் சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள அந்நாட்டு அரசு, 3 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அறிவித்துள்ளது.

லைபீரியா தலைநகர் மன்ரோவியாவிலுள்ள தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு பிரார்த்தனை இடம்பெற்றுள்ளது. அதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். அப்போது, ஆயுதங்களுடன் கொள்ளையர்கள் அங்கு வந்துள்ளனர். இதனைப் பார்த்து மக்கள் தப்பி ஓடியுள்ளனர். அதில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 29 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். சிகிச்சைபெற்று வருவோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச சந்தையில் சடுதியாக மசகு எண்ணெய் விலை உயர்வு

### உள்நாட்டில் பெற்றோல் – டீசல் விலை அதிகரிக்கும் அபாயம்

சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை ஏழு ஆண்டுகளில் இல்லாதளவிற்கு உயர்ந்துள்ளது.

ஈரான் - துருக்கி இடையிலான எண்ணெய்க் குழாயில் ஏற்பட்டுள்ள சேதம், உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் ஏற்பட்டுள்ள பதற்றம் போன்ற காரணங்களால் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

சர்வதேச மசகு எண்ணெய் விலை அடிப்படையில், உள்நாட்டில் பெற்றோல், டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிக்கின்றன. மசகு எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், பெற்றோல், டீசல் விலை உயரும் என அஞ்சப்படுகிறது.

சர்வதேச சந்தையில் நேற்றுமுன்தினம் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 6,600 ரூபாவாக (இந்திய ரூபாபடி) உயர்ந்தது. நான்கு வாரங்களில் மசகு எண்ணெய் விலை 20 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

## புதிய உலக சாதனை படைத்த பெல்ஜியத்தை சேர்ந்த சாரா

பெல்ஜியத்தை சேர்ந்த 19 வயதான சாரா ரூதர்போர்ட் மிக இளம் வயதில் தன்னந்தனியாக உலகை சுற்றி வந்த முதல் பெண் என்ற உலக சாதனையை படைத்துள்ளார்.






பெல்ஜியத்தின் Wevelgem விமான நிலையத்திலிருந்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தன் வரலாற்றுப் பயணத்தை தொடங்கிய சாரா, 5 மாதத்தில் 5 கண்டங்களில் 51 ஆயிரம் கிலோமீற்றர் பயணித்து உலக சாதனை படைத்துள்ளார்.

பாலின சமத்துவம் குறித்து உலக மக்களுக்கு பறைசாற்ற இலகு ரக விமானத்தில் தனி ஆளாக பயணித்த வருங்கால விண்வெளி வீராங்கனை சாரா ரூதர்போர், இலங்கை, இந்தியா உட்பட 52 நாடுகளைச் சேர்ந்த முக்கிய இடங்களுக்கு பயணம் மேற்கொண்டார். கடந்த டிசம்பர் இறுதியில் கோவை வந்த சாரா தன் பயணத்திற்கு நிதி வழங்கும் தொழிலதிபருக்கு நன்றி தெரிவித்தார்.

இதற்கு முன் கடந்த 2017ஆம் ஆண்டு அமெரிக்க பெண் விமானி Shaesta Waiz தன் 30ஆவது வயதில் தனி ஆளாக வானில் 30 ஆயிரம் கிலோமீற்றர் பயணித்ததே சாதனையாக இருந்த நிலையில், அதை ஷாரா 19ஆவது வயதில் கடந்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.




## கார்க்குண்டு வெடிப்பால் சிறை தகர்ப்பு; ஐ.எஸ். தீவிரவாதிகள் தப்பியோட்டம்



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளை அடைத்துவைத்திருந்த சிறையின் கேட் கார் வெடிகுண்டு மூலம் தகர்க்கப்பட்டது. இதில், சிறையிலிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் அச்சுறுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை ஒழிக்கும் நடவடிக்கையில் பல நாடுகள் தீவிரமாக இறங்கின. இதில் அமெரிக்காவுக்கு சிரியாவின் வடக்கு பகுதியிலிருந்த குர்திஷ் கிளர்ச்சியாளர்களின் படைகளும் உதவின. ஐ.எஸ். தீவிரவாதிகளை கைதுசெய்து அங்குள்ள சிறைகளில் அடைத்து அவர்களை கண்காணித்து வந்தனர். குர்திஷ் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் ஹவெரன் என்ற சிறையிலும் நூற்றுக்கணக்கான ஐ.எஸ். தீவிரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.



இந்நிலையில், ஹவெரன் சிறையில் கார்க்குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. சிறை கேட் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரொன்று வேகமாக வந்து மோதியுள்ளது. இதில் கார் வெடித்துச் சிதறியதுடன், சிறை கேட் சேதமடைந்தது. இதனைத்தொடர்ந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் சிறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், சிறையில் அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகளையும் விடுதலை செய்தனர். இந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அசதியில் அயர்ந்து கண்ணுறங்கும் கவி - அசோகா



அவுஸ்திரேலியாவில் இரண்டு குட்டி யானைகள் ஒன்றோடொன்று நெருக்கமாக உறங்கும் காட்சிகள் இணையத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

சிட்னியிலுள்ள விலங்கியல் பூங்காவில் 'கவி' மற்றும் 'அசோகா' என்று பெயரிடப்பட்ட இரண்டு ஆசிய ஆண் யானைக்குட்டிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில் அசதியான அசோகா அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த வேளையில், அதனருகே வந்த கவி என்ற யானை அதனை இடித்துக்கொண்டு படுத்துறங்கியது.

அவுஸ்திரேலியாவில் தற்போது தேசிய அரவணைப்புத் தினம் கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7